அர்ச். தோமையாருடைய வரலாற்றுச் சுருக்கம்.

அர்ச். தோமையாருடைய வரலாற்றுச் சுருக்கம்.

Pastor D. Arumai Raj
[illegible] Gospel Prayer House,
9th Main, Mariyappan Palyam
Magadi Road, 4th Cross
BANGALORE-560 023

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 013 B
BANGALORE-23

Imprimatur :

FRANCIS CARVALHO

ADMINISTRATOR APOSTOLICUS DIOCOESIS
MELIAPORENSIS.

SAN THOME,
15th September, 1952.

PRINTED BY THE ASSOCIATED PRINTERS (MADRAS) LTD., & PUBLISHED
BY THE DIOCESE OF MYLAPORE.



சேசு கிறீஸ்துவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகிய
அர்ச். தோமையார்.

முன்னுரை

அர்ச். தோமை அப்போஸ்தலர் இந்தியாவுக்கு வந்த 19-ம் நூற்றுண்டு கொண்டாடப்படும் இவ்வாண்டில் நமது தமிழ் கத்தோலிக்கர் அவரைப்பற்றிய உண்மை வரலாற்றை அறிந்து கொள்ள ஒரு சிறு நூல் தேவை என்று இது வெளியாகிறது.

இது சில நாட்களுக்கு முன்பு வெளியான "In the Steps of St. Thomas", (by Rev. Fr. Herman D'Souza, M.A., M.ED.) என்ற ஆங்கில நூலையே பெரும்பாலும் தழுவி எழுதப்பட்டது. மற்ற நூல்களும் கையாளப்பட்டன. கூடியவரையில் சரித்திர சான்றுகளுடன் ஒவ்வொரு அபிப்பிராயமும் நிரூபிக்கப்பட்டுள்ளது. அர்ச். தோமையார் இந்தியாவுக்கு வந்ததும், முக்கியமாக அவருடைய கல்லறை மைலாப்பூரில் இருப்பதும் **பழைய கதை** என்று ஒருவாறு புறக்கணிப்பவர்களும் உண்டு. அவர்களை இச்சிறு நூல் ஓரளவு மனந்திருப்புமென்பது எமது துணிபு.

R. ARULAPPA.

ST. TERESA'S CHURCH,
NUNGAMBAKAM,
5—9—'52.

1

சுவிசேஷத்தில் சொல்லியிருப்பது

நமதாண்டவராகிய சேசுகிறீஸ்துநாதர் தெரிந்துகொண்ட பன்னிரண்டு அப்போஸ்தலர்களுள் அர்ச். தோமையாரும் ஒருவர். அப்போஸ்தலர் என்றால் கடவுளால் அனுப்பப்பட்டவர் என்று அர்த்தம்.

"பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை **அனுப்புகிறேன்**" (அரு. 20, 21), என்ற வார்த்தையின்படி, உலகின் எத்திசையிலும் சென்று தம்முடைய திவ்விய போதகங்களைச் சகல சாதி சனங்களுக்கும் அறிவித்து, அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்துத் தம்முடைய திருச்சபையை உலகெங்கும் நிலை நிறுத்தும்படி **அனுப்பப்பட்ட** பன்னிரண்டு ஏழைச் செம்படவர்களுள் அர்ச். தோமையாரும் ஒருவர்.

(1) இவருக்கு நமதாண்டவர்மீது ஒரு தனிப்பற்றுதல் இருந்ததாகச் சுவிசேஷம் கூறுகிறது. (அரு. 11 அதி.).

தமக்கு மிகவும் பிரியமாயிருந்த லாசர் இறந்த பிறகு கிறீஸ்துநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கி, "யூதேயாவுக்கு மறுபடியும் போவோமாக" என்றார்.

அப்போது சீஷர்கள் அவரை நோக்கி, "ஆண்டவரே, இப்போதுதானே யூதர்கள் உம்மைக் கல்லால் அடிக்கத் தேடினார்கள். திரும்பவும் அங்கே போகிறீரே" என்றார்கள். தம்முடைய குருவோடு சேர்ந்து போவதற்குத் தயங்கி நின்றார்கள். தங்கள் உயிருக்கு அங்கு ஏற்படக்கூடிய ஆபத்தை நினைத்து அஞ்சினார்கள்.

இங்ஙனம் மற்றவர்கள் எல்லோரும் பின்வாங்கும் நேரத்தில் **திதிமுஸ் என்னப்பட்ட தோமையார்** மற்றவர்களைப் பார்த்து

"அவரோடுகூட சாவதற்கு நாமும் போவோமாக" என்றார். தமக்கிருந்த ஆர்வத்தையும் அன்பின் துணிச்சலையும் காட்டினார்.

இவ்வளவு துணிச்சலையும் அன்பின் ஆர்வத்தையும், தம் குருவின் மீது தமக்கிருந்த பற்றுதலையும் தோமையார் ஒரு நேரத்தில் காட்டினார் எனினும், ஆபத்து நேரம் வந்தபொழுது அதாவது நமதாண்டவர் பிடிபட்டபொழுது, அவரும் மற்றவர்களைப் போலவே தமது குருவைவிட்டு ஓடிவிட்டார். தம் குருவோடு சேர்ந்து சாவதற்கு போதிய தைரியமும், துணிச்சலும், ஆர்வமும் அப்போது இல்லாமல் போய்விட்டது. ஏனெனில் திடத்தின் ஆவியாகிய இஸ்பிரீத்து சாந்து அவர்கள் மேல் வரவில்லை.

(2) அர்ச். தோமையாரிடத்தில் ஆரம்பத்திலேயே ஒருவித பிடிவாத குணம் இருந்தது. அது அவருக்கு பெருத்த தீங்கை விளைவிப்பதாய் இருந்தது. ஆனால் ஆண்டவர் அவர் மேல் விசேஷ இரக்கம்வைத்து அங்ஙனம் நேராதபடி தடுத்துவிட்டார்.

உயிர்த்த நாளன்று மாலை சீஷர்கள் எல்லோரும் கூடியிருந்த இடத்தில் ஆண்டவர் தரிசனையாகி காயம்பட்ட தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்து, தாம் உண்மையாகவே உயிர்த்ததாக அத்தாட்சி கொடுத்தார். சீஷர்கள் அவரைக்கண்டு சந்தோஷப்பட்டார்கள். ஆனால் அந்த நேரத்தில் தோமையார் அவர்களோடு இல்லை. பிறகு அவர் வந்தபொழுது, மற்றச் சீஷர்கள் சுவாமியைக் கண்டோமென்று அவருக்குச் சொன்னபோது, அவர், "நான் அவருடைய கரங்களிலே ஆணிகள் அறைந்த துவாரத்தைக் கண்டு, ஆணிகள் இருந்த விடங்களிலே என் விரலையும்விட்டு, அவருடைய விலாவில் என் கையையும் இட்டாலொழிய நான் விசுவசிக்கமாட்டேன்" என்று அவர்களுக்குச் சொன்னார்.

"எட்டு நாளைக்குப்பின் மறுபடியும் அவருடைய சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருக்கையில் அவர்களோடு தோமையாரும் இருந்தார். அப்பொழுது கதவுகள் பூட்டியிருக்க, யேசுநாதர்

வந்து நடுவில் நின்று 'உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக,' என்றார்.

"பின்னும் அவர் தோமையாரை நோக்கி, இங்கே உன் விரலை இடு, என் கரங்களைப்பார். உன் கையை நீட்டி என் விலாவிலே வை, அவிசுவாசியாய் இராமல் விசுவாசியாய் இரு" என்று திருவுளம் பற்றினார்.

"தோமையார் அவருக்கு மறு மொழியாக **என் ஆண்டவரே, என் தேவனே என்றார்.**

"யேசுநாதர் அவரை நோக்கி, தோமாஸ்! நீ என்னை கண்டதினாலல்லோ விசுவசித்தாய், காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள்" என்றார்—(அரு. 20 : 5, 29) அவருடைய பிடிவாதத்தைப்பற்றி நமதாண்டவர் அவரை ஒரு சிறிது கடிந்து கொண்டார்.

கர்த்தர் உயிர்த்ததைப்பற்றி அவர் கொண்ட சந்தேகம் கடைசியில் அவ்வுண்மையை எண்பிக்க ஒரு பெரும் அத்தாட்சியாகவே முடிந்தது. முதலில் எவ்வளவுக் கெவ்வளவு விசுவசியாமலிருந்தாரோ அவ்வளவுக்கவ்வளவு அழுத்தமாக அவ்விசுவாசத்தைப் பிறகு காண்பித்தார்.

என் ஆண்டவரே, என் தேவனே என்று கூறி அவரை ஆராதித்தது அவ்விசுவாசத்தின் ஒரு உன்னத முயற்சியேயன்றோ!

(3) கடைசி இராப்போசனத்தின்போது நமதாண்டவர் சீஷர்களைப் பார்த்து, "நான் எவ்விடம் போகிறேனென்றும் அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள். என்க, தோமையார் அவரை நோக்கி, ஆண்டவரே, நீர் போகிறது எவ்விடமென்று அறியோமே. வழியை நாங்கள் எப்படி அறியக்கூடும்? என்றார்.

"யேசுநாதர் அவரை நோக்கி, வழியும், சத்தியமும், ஜீவனும் நானே. என் வழியாய் அல்லாமல் பிதாவினிடத்தில் சேருகிறவன் ஒருவனும் இல்லை.

"நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள், ஆனால் இது முதல் அவரை அறிந்துக் கொள்வீர்கள். அவரைக் கண்டுமிருக்கிறீர்கள் என்றார்." (அரு. 14, 4 : 7).

கிறீஸ்துநாதர் தம்மைப்பற்றிக் கூறிய மொழிகளுள் மிக முக்கியமானவையாகிய இவை தோமையார் கேட்ட ஒரு கேள்விக்குப் பதிலாக கூறப்பட்டனவேயாம்.

ஒர்ட்டோனு
சிரியா
எதெஸ்ஸா
காஸ்பியன் கடல்
இர்க்கானியா
பாக்த்ரியா
பார்த்தியா
மேதியா
கியோஸ்
பாலஸ்தீனு
பாரசீகம்
கார்மானியா
சிந்து நதி
இந்தியா
எத்தியோப்பியா
சொக்கோத்ரா.
மைலாப்பூர்
இரங்கனுர்
சின்னமலை—பெரியமலை

மலையாள நாட்டில் கிறிஸ்துவர்களால் விசேஷமாய் வணங்கப்படும் அர்ச். தோமையாருடைய உருவப்படம்.

2

இஸ்பிரீத்துசாந்து வருகைக்குப் பின்

உலகின் எத்திசையிலும் சென்று தமது பரிசுத்த சுவிசேஷத்தைப் போதிக்க வேண்டுமென்ற கிறீஸ்துநாதருடைய கட்டளையின்படி அவருடைய அப்போஸ்தலர்கள் எல்லோரும் இஸ்பிரீத்துசாந்துவைப் பெற்றுக் கொண்டபின், அந்நாளைய நாகரீக உலகத்தின் பல பாகங்களுக்குச் சென்று, கிறீஸ்துவையும் அவருடைய இரட்சண்யத்தையும் எந்நாட்டினருக்கும் பிரசங்கித்தார்கள். அப்படியே பன்னிருவரில் ஒருவராகிய தோமையாரும் **பார்த்தியா, இர்க்கானியா, பாக்த்ரியா** முதலான நாடுகளில் (அதாவது, இக்காலத்து பாரசீகம், அராபியா, ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளில்) முதலில் பிரசங்கித்து, கடைசியாக இந்தியா தேசம் வந்ததாக பாரம்பரிய சரித்திரம் கூறுகிறது. அர்ச். தோமையார் **சீனுவுக்கும்** போனதாகச் சொல்லப்படுகிறது. கி. பி. **1545**-ம் ஆண்டில் அர்ச். சவரியார் சீன தேசத்துக்குப் போகும் வழியில் **மலாக்கா** என்ற இடத்திலிருந்து உரோமைக்கு எழுதிய கடிதத்தில்—அர்ச். தோமை அப்போஸ்தலர் **சீன நாட்டில்** சுவிசேஷத்தைப் போதித்ததாக மலாக்கா ஜனங்கள் தம்மிடம் சொன்னதைக் குறிப்பிடும் செய்தி கவனிக்கத்தக்கதாம்.

சீனுவில் **பெக்கிங்** நகரில் கி.பி. 1590-ம் ஆண்டில் கட்டப்பட்ட ஒரு கோவிலில், "அர்ச். தோமை அப்போஸ்தலரால் (இங்கு) கிறீஸ்துவ விசுவாசம் கொண்டுவரப்பட்ட பிறகு . . . ." என்று எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் போதிய சரித்திர சான்றுகள் இன்னும் கிடைக்கவில்லை.

அக்காலத்தில் அத்தனை நாடுகளையும் கடந்து அவ்வளவு தூரம் பிரயாணம் செய்து, இங்கு எப்படி வந்திருக்கக்கூடும்? என்ற சந்தேகமே எற்படவேண்டிய அவசியமில்லை. ஏனெ

னில் அக்காலத்திலேயே, விசேஷமாய் உரோமையர்களுடைய ஆட்சியில் ஐரோப்பிய நாடுகளுக்கும், ஆசிய நாடுகளுக்கும் பேர்போன வியாபார மார்க்கங்கள் இருந்ததோடு வியாபாரப் போக்கு வரத்தும் பிரபலமாய் நடந்து வந்தது. அப்படி எவ்விதமான போக்குவரத்தேயில்லை, எவ்வித பிரயாண மார்க்கங்களேயில்லையென்று வைத்துக்கொண்டாலும், தம்முடைய சுவிசேஷம் எங்கும் பரப்பத் தமது அப்போஸ்தலர் எந்நாட்டுக்கும் செல்ல ஒரு வழியைக் கண்டுபிடிக்க கடவுளால் முடியாமற் போயிராது.

அக்காலத்தில் **அபக்கூக்** என்ற தீர்க்கதரிசி யூதேயா நாட்டிலிருந்து ஒரு நிமிஷத்தில் அவ்வளவு தூரத்தையும் கடந்து, பாபிலோனில் சிங்கக் குகையில் துன்புற்றிருந்த தமது ஊழியன் தானியேலுக்குப் பசிதீர உணவு அளிக்கும்படி தமது சம்மனசின் மூலமாக ஏற்பாடு செய்த கடவுள் தமது அப்போஸ்தலர்களும் எங்கும் செல்ல எளிதில் ஒரு வழியைக் கண்டுபிடிக்க இயலாமல் போகுமோ ? வேண்டியிருந்தால் ஒரு அற்புதத்தையும் செய்யாமல் போவாரோ ?

மேற்கூறிய வியாபாரத்தின் போக்குவரத்தின் பயனாகவே, அர்ச். தோமையார் நமது தேசத்திற்கு வந்ததாக சொல்லப் படுகிறது. எப்படியெனில், தோமையார் முதலில் இந்தியா நாட்டிற்குவர மனமில்லாதவராய் இருந்தார் என்றும், ஆனால் நமதாண்டவர் அவரை இந்திய நாட்டு **கொந்த போரஸ்** என்ற அரசனுடைய வியாபாரி ஹப்பான் என்பவனுக்கு அடிமையாக விற்றுவிட்டதாகவும், அதனால் இந்தியாவிற்கு வரவேண்டியதாயிற்று என்றும் பழைய கதை கூறுகிறது. இது அவ்வளவும் உண்மை என்று சொல்வதற்கு போதிய ஆதாரம் இல்லையென்றாலும், **அர்ச். தோமையார் இந்தியா தேசத்திற்கு வந்த உண்மையை யாரும் மறுக்கமுடியாது.**

சரித்திர ஆசிரியர்கள் பலர் இதை எண்பிக்கிறார்கள். அர்ச். தோமையார் இந்தியாவில் கிறீஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து அங்கேயே மரித்தார் என்பதுதான் அவர்களுடைய சாட்சியம். அவர்களுள் இரண்டொருவரை மட்டும் இங்கு குறிப்பிடுவோம்.

(1) கி.பி. 250-வது வருஷத்திற்கு முன்பு இயற்றப்பட்ட "**அப்போஸ்தலர்களுடைய போதனை**" என்ற சீரிய மொழி நூலில், "இந்தியாவும் அதைச் சேர்ந்த நாடுகளும் அதைச் சுற்றியுள்ள நாடுகளும் தோமையாரிடமிருந்து அப்போஸ்த லிக்கு குருத்துவத்தைப் பெற்றன. அவர் அங்குத் திருச் சபையை அமைத்து, அதன் பரிபாலகராகவும், போஷகராகவும், கண்காணிப்பவராகவுமிருந்தார்," என்று சொல்லியிருக்கிறது.

(2) கொன்ஸ்தாந்திநோபிள் சபை **ஆராதனைப் புஸ் தகம்** கூறுவதாவது, "தோமையார், பார்த்தியர், மேதியர், பாரசீகர், **இந்தியர்** இவர்களுக்குத் தேவ வார்த்தையைப் பிர சங்கித்து, இந்தியர்களால் குத்திக் கொல்லப்பட்டார்." குருக் கள் இப்போது சொல்லும் "ப்ரீவியரி" என்ற செப புஸ்த கத்திலும் அவ்வாறே சொல்லப்பட்டிருக்கிறது.

திருச்சபையைவிட்டு பிரிந்துபோன **நெஸ்தோரியர், ஏயூத்திக் கியர்** முதலானவர்களுடைய ஆராதனை புஸ்தகங்களில்கூட இங்ஙனமே சொல்லப்பட்டிருக்கிறது.

(3) **அர்ச். எப் f ரெம்** கி.பி. நான்காவது நூற்றுண்டில் எழுதிய ஞானப் பாடல்களுள் ஒன்று பின்வருமாறு :—

"பேயானது கதறிக் கூச்சலிட்டதாவது : **இந்தியாவில் நான் சாகடித்த அப்போஸ்தலர்** எதேசாவுக்கு* என்னை துன் புறுத்த வந்துவிட்டார். தோமையாருடைய கல்லறையில் மறைந்திருக்கும் சக்தி என்னைப் பெரும் வேதனைக்குள்ளாக்கு கிறது." அதே அர்ச். எப்ரெம், அப்போஸ்தலரைப் பார்த்து பின்வருமாறு வேண்டுகிறார் : "ஓ அப்போஸ்தலரே, நீர் ஆசீர்வதிக்கப்பட்டவர். இந்தியா தேசம் தமது திருக்குமார னுடைய நேசப் பத்தினியாகும் பாக்கியத்தை பெறுவதற்கு தெய்வீக இராஜா உம்மைத் தெரிந்துக் கொண்டார்."

(4) **அர்ச். அம்ப்ரோஸ்,** கி.பி. 4-வது நூற்றுண்டில், "கரடு முரடான மலைகளால் சூழப்பட்ட இராச்சியங்களுக்குள்

---

* அர்ச். தோமையாருடைய சரீரம் இந்தியாவிலிருந்து எதேசா என்ற நகருக்கு கொண்டு செல்லப்பட்ட சம்பவத்தைக் குறிப்பிட்டு இங்ஙனம் பேசு கிறது என்க.

ளும் அப்போஸ்தலர்கள் நுழைந்தார்கள். இங்ஙனம் **தோமை யார் இந்தியாவுக்கும்,** மத்தேயு பாரசீகத்திற்கும் சென்றார் கள்,'' என்று எழுதினர்.

(5) இங்ஙனமே, பாபிலோன் மேற்றிராணியாராகிய அப்தியாஸ் என்பவர் பெயரால் கிறீஸ்து பிறந்த முதல் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் ;

கி.பி. 4-வது நூற்றாண்டில் அர்ச். கிரகோரி நாசியான்சன் என்பவருடைய சாட்சியமும் ;

கி.பி. 6-வது நூற்றாண்டில் தூர்ஸ் நகரத்து மேற்றிராணியாராகிய அர்ச். கிரகோரியார்.

பிற்காலத்தில் அர்ச். பீட்**d** முதலான பலருடைய சாட்சியங்களும் இவ்வுண்மையை எண்பிக்க போதுமானவையாகும்.

(6) இந்தியா தேசத்து சரித்திராசிரியர்களும் இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். **வின்சென்ட் ஸ்மித்** என்ற சரித்திராசிரியர், "தோமை அப்போஸ்தலர் தென் இந்தியாவுக்கு வருவதற்கு அக்காலத்தில் போதிய வசதிகள் இருந்தன என்பதை யாரும் ஏற்றே தீரவேண்டும். அவர் **சொக்கோத்ரா*** வழியாய் வந்தாரெனப் பாரம்பரியமாய் சொல்லப்பட்டு வரும் அபிப்பிராயத்தில் நம்பக்கூடாதது ஒன்றுமில்லை. அச் சோக்கோத்திரா தீவில் அக்காலத்தில் கிறீஸ்துவர்கள் குடியிருந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை . . .

"அவர் தென் இந்தியாவில் வேத சாட்சியாகக் கொல்லப்பட்டார் என்ற உண்மையே மற்ற எல்லா அபிப்பிராயங்களைவிட அதிக அத்தாட்சிகளைக் கொண்டது. வெகு நாள் ஆராய்ச்சி செய்தபின் என் உறுதியான தீர்மானம் இஃதேயாம்,'' என்று கூறுவது கவனிக்கத்தக்கது.

(7) டாக்டர் மிங்கானா என்ற சரித்திராசிரியர் : "அர்ச். தோமையாரைப் பற்றிப் பேசும் எந்த சரித்திராசிரியனும், எந்த ஆராதனைப் புஸ்தகமும், எத்தகைய எழுத்தாளரும்

---

* அராபியாவுக்கு தெற்கே இந்து மகா சமுத்திரத்திலுள்ள ஒரு தீவு.

அப்பெயரை இந்தியாவோடு சம்பந்தப்படுத்தாமல் பேசியதில்லை. . . . . அவருடைய பெயர் இந்தியாவுடன் சம்பந்தப்படாமல் இருக்கமுடியாது " என்கிருர்.

புக்நான் (Buchanan) என்ற புரோட்டஸ்டண்டு ஆசிரியர், " அர்ச். இராயப்பர் உரோமையில் இறந்தார் என்று காட்ட எவ்வளவு அத்தாட்சியுள்ளதோ அவ்வளவு அத்தாட்சியிருக்கிறது அர்ச். தோமையார் இந்தியாவில் இறந்தார் என்று காட்ட " என்று கூறுகிருர்.

இந்தியாவுக்கு வந்தார் என்பது நிச்சயம். ஆனல் ஒரு முறை வந்தாரா ? இரு முறை வந்தாரா ? என்ற ஒரு கேள்வி இருக்கிறது. அதைப்பற்றி ஈண்டு ஆராய்வோம்.

ஒரு முறையா, இரு முறையா ?

இஸ்பிரீத்து சாந்துவின் வருகைக்குப்பின் அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தைப் போதிப்பதற்கு உலகின் பல பாகங்களைத் தங்களுக்குள் திருவுளச் சீட்டுபோட்டுப் பங்கிட்டுக் கொண்டார்கள் என்று ஒரு பழைய பாரம்பரியம் இருந்துவருகிறது. அப்படிச் சீட்டு போட்டபோது முதலில் தோமை அப்போஸ்தலருக்குப் **பார்த்தியா** என்ற நாடு விழுந்ததாக **எயுசேபியஸ்** என்ற திருச்சபை சரித்திராசிரியர் கி.பி. 337-ம் வருஷத்துக்கு முன்பே எழுதி வைத்திருக்கிருர் :—

" நமதாண்டவரும் இரட்சகருமானவருடைய அப்போஸ்தலர்களும் சீஷர்களும் உலக முழுவதும் பிரிந்து சென்று சுவிசேஷத்தைப் போதித்தார்கள். தோமையாருடைய **பங்குக்கு பார்த்தியா நாடு** விழுந்ததாக நம் முன்னோர்கள் சொல்லியிருக்கிருர்கள்," என்கிருர்.

கி.பி. 735-ம் ஆண்டில் மரித்த **அர்ச். பீட்** என்பவர், " விசுவாசத்தைப் பிரசங்கிப்பவர்களும், எல்லா தேசங்களினுடையவும் போதகர்களாகவுமாக இருக்கும்படி தெரிந்துகொள்ளப்பட்ட கிறீஸ்துவின் அப்போஸ்தலர்கள் உலகின் பல பாகங்களில் தங்களுக்குக் **குறிக்கப்பட்ட** அலுவல்களை (நாடுகளை)

ஏற்றுக்கொண்டார்கள். இராயப்பர் உரோமையை ஏற்றார்; அந்திரேயாஸ் ஆக்காய்யா நாட்டை ஏற்றுக்கொண்டார். இயாகப்பர் ஸ்பெயின் தேசத்தையும், **தோமையார் இந்தியாவை**யும், அருளப்பர் ஆசியாவையும் ஏற்றார்," என்கிறார்.

இவ்விரு சாட்சியங்களில் கூறியிருப்பதுபோல் **பார்த்தியா** என்னும் நாட்டையும் **இந்தியா** என்னும் நாட்டையும் தனியாகப் பிரித்து நமதப்போஸ்தலர் அந்நாடுகளுக்கென்று **தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டார்.** அவர் பங்காக இந்நாடுகள் விழுந்தன என்று கூறும் வேறு சாட்சியங்களும் உண்டு.

ஆனால் அவர் **பார்த்தியா, மேதியா, ஹிர்க்கானியா, பாக்த்திரியா, இந்தியா** முதலிய நாடுகளில் சுவிசேஷம் போதித்தார் என்று அவர் தரிசித்த நாடுகள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கூறும் சாட்சியங்களும் நிறைய இருக்கின்றன.

கி.பி. நாலாம் நூற்றாண்டில் அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் கூறுவது: "அப்போஸ்தலர்கள் எங்கும் திருப்பலி பீடங்களை ஏற்படுத்தினார்கள். . . . . அர்ச். தோமையார், **சித்தியர், பார்த்தியர்** இந்தியர்களிடையில் அப்பீடங்களை ஸ்தாபித்தார்."

சொப்ரோனியுஸ் என்பவர் "தோமை அப்போஸ்தலர் பார்த்தியர், மேதியர், பாரசீகர், கார்மானியர், ஹிர்க்கானியர், பாக்த்திரியர், மாஜியர் முதலான சனங்களுக்கு, ஆண்டவருடைய சுவிசேஷத்தை போதித்தார். இதை நாம் பாரம்பரியமாக அறிகிறோம்" என்று கூறுகிறார்.

இன்னும் இவைபோன்ற பல சாட்சியங்கள் உள்ளன. அர்ச். தோமையார் பார்த்தியா முதலான நாடுகளில் போதித்தார். அர்ச். தோமையார் இந்தியாவுக்கு வந்தார் என்ற இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதுபோல் தோன்றுகின்றன. ஆனால் சரித்திராசிரியர் ஆராய்ச்சியின்படி விரோதம் ஒன்றும் இல்லை.

ஏனெனில் அவர்கள் அபிப்பிராயம் பின்வருமாறு:—

இஸ்பிரீத்து சாந்து எழுந்தருளி வந்ததும் அப்போஸ்தலர்கள் திருவுளச் சீட்டு போட்டபோது தோமையார் பேருக்கு

பார்த்தியா நாடு விழுந்திருக்கவேண்டும். அவரும் அதன் படியே பிரசங்கம் செய்யப் புறப்பட்டு போயிருக்கவேண்டும். மேற்கூறிய ஹிர்க்கானியா, மேதியா, பாரசீகம், கார்மானியா, பார்த்தியா, பாக்திரியா நாடுகள் ஒன்றை யொன்று ஒட்டி யிருப்பதால் நமதப்போஸ்தலர் போனவிடங்களிலெல்லாம் சுவி சேஷம் போதித்திருப்பார் என்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அடுத்திருக்கும் நாடுகளையும் சுற்றிப்பார்த்திருப்பார் என்று சொல்வதில் நம்பத்தகாதது ஒன்றுமில்லை.

உலகின் எத்திசையிலும் சென்று ஒவ்வொரு சிருஷ்டிக்கும் தமது சுவிசேஷத்தைப் போதிக்கவேணுமென்ற ஆண்டவருடைய கட்டளையின்படி, அப்போஸ்தலர்கள் ஒரே நாட்டில் தங்கிப் போதித்துக்கொண்டிராமல், பல நாடுகளுக்கும் செல்லவேண் டியது அவசியமாய் இருந்தது. அங்ஙனமே செல்லும்படி இஸ் பிரீத்து சாந்துவும் அவர்களுக்கு ஏவுதல் அளித்திருக்கவேண் டும்.

திருவுளச் சீட்டு போட்டபொழுது ஒவ்வொரு அப்போஸ் தலருடைய பேருக்கும் ஒரு தேசம் விழுந்தது என்று சொல்லும் பொழுது, அந்தந்த அப்போஸ்தலர் அந்தந்த நாட்டில் மட் டுமே சுவிசேஷத்தைப் போதித்து அங்கேயே கடைசிமட்டுமிருந்து உயிர் விட்டிருக்கவேண்டும் ; வேறெந்த நாட்டுக்கும் போயிருக்க முடியாது என்று சிலர் நினைத்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் அப்படியனறு. ஏனெனில் வேதாகமத்தில் காணும் சில குறிப்புக்களுக்கிணங்க, இஸ்பிரீத்து சாந்துவானவர் அவர் களைப் பல சந்தர்ப்பங்களில் எங்கெங்கு தூண்டினாரோ அங்கங் கெல்லாம் சென்றார்கள். அதுவே ஆண்டவருடைய சித்தமு மாயிருந்தது.

மேலும், கி.பி. முதல் நூற்றாண்டில் **பார்த்தியர்** இந்தி யாவின்மீது படையெடுத்துத் தங்கள் ஆட்சியை இந்தியாவின் வடக்கு பாகங்களில் ஸ்தாபித்தார்கள் என்று இந்திய தேச சரித்திரமும் கூறுவதற்கிணங்க, அர்ச். தோமையார் பார்த்தி யர்களுக்குப் போதித்தபின் பார்த்தியர்கள் ஆண்ட இந்தி யாவுக்கும் வந்திருக்க வேண்டும். அங்குதான் பார்த்திய

அரசனுன கொந்தபோரஸ் என்பவனைச் சந்தித்ததாக சரித்திரமும் கூறுகிறது. இது சுமார் கி.பி. **46–48-ல்** இருக்க வேண்டும்.

தேவமாதா மரித்தபோது அப்போஸ்தலர்கள் எல்லோரும் யெருசலேம் நகரில் கூடியிருந்தார்கள் என்ற பழைய சரித்திரத்திற்கிணங்க, அர்ச். தோமையார் இந்நாடுகளைத் தரிசித்த பின் யெருசலேமுக்குப் போயிருக்க வேண்டும். மீளவும் அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கச் சிதறிப்போனபோது, அர்ச். தோமையார் பழைய **எத்தியோப்பியா** நாட்டின் வழியாகப் பிரசங்கித்துக்கொண்டு, இந்து மகா சமுத்திரம் அரபிக்கடல் வழியாய் மலையாளக் கரையில் வந்து சேர்ந்திருக்கவேண்டும். இது நடந்தது கி.பி. **52-ம்** ஆண்டு என்று சொல்லப்படுகிறது.

எத்தியோப்பியாவில் சுவிசேஷம் போதித்தார் என்பதற்கும் அத்தாட்சிகள் உள்ளன. அர்ச். கிறிசோஸ்தம் அருளப்பர் அதைக் குறித்துச் சொல்லுவது: "தோமையார் எத்தியோப்பியரை ஞானஸ்நானத்தில் சுத்தப்படுத்துகிருர்." . . . . **மார்க்கோ போலோ** என்ற யாத்ரிகர் இந்தியாவுக்கு வந்தபோது, அங்கிருந்த கிறீஸ்தவர்களும் தோமையார் இந்தியாவுக்கு வருமுன் எத்தியோப்பியாவுக்குப் போனுர் என்ற செய்தியை தமக்குச் சொல்லக் கேட்டதாகக் கூறுகிருர்.

சொக்கோத்ரா தீவிலும் பிரசங்கித்தார் என்பதற்குச் சந்தேகமில்லை. அத்தீவின் வழியாகவே வந்தாரென்று, வின்செண்ட் ஸ்மித் இந்திய சரித்திராசிரியர் கூறுவது கவனிக்கத் தக்கது.

ஆகவே ஆராய்ச்சியாளருடைய இவ்வபிப்பிராயத்தின்படி அர்ச். தோமையார் இந்தியாவுக்கு இருமுறை வெவ்வேறு மார்க்கமாக வந்தாரென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இதைப்பற்றி அதிக சந்தேகமும் கிடையாது.

3

இந்தியாவின் எப்பாகத்தில்?

இந்திய நாட்டில் கொந்தபோரஸ் என்ற அரசனுடைய வியாபாரியாகிய ஹப்பான் என்பவனுக்கு தோமையார் அடிமையாக விற்கப்பட்டார் என்று மேற்சொல்லப்பட்டது.

இந்த கொந்தபோரஸ் அரசன் **ɡகுட்dனரிபார், குடபாரா** என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுவதுண்டு.

இந்த கொந்தபோரஸ் இந்தியாவின் வடமேற்குப் பாகத்தில் அக்காலத்தில் ஆண்ட அரசன் ஒருவனென்று கூறப்படுகிறது. 19-வது நூற்ருண்டில் இந்தியாவின் இதே வடமேற்கு பாகங்களில் கொந்தபோரஸ்* என்ற பெயரைத் தாங்கிய பல நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டது. இதற்கு ஒரு அத்தாட்சி என்று சொல்லலாம்.

இந்த அரசனும் அவனுடைய சகோதரன் காத்d என்பவனும் அர்ச். தோமையாரால் மனம் திருப்பப்பட்டார்களென்றும், அர்ச். தோமையார் அங்கு பல அற்புதங்களைச் செய்தார் என்றும் பழைய சரித்திரம் கூறுகிறது.

---

* "இந்தோ-பார்த்திய பிரதேசத்தில், அர்ச். தோமையாரோடு சம்பந்தப்பட்ட ஒரு கிறீஸ்துவ சபையினர் வந்து உழைத்திராவிடில் பெரும்பாலும் மறைபெயராகவே இருந்த கொந்தபோரஸ் என்ற பெயர், எப்படி சரித்திரத்தில் வந்து நுழைந்தது என்று கண்டு பிடிக்க முடியவில்லை. . . . . இப்பிரதேசத்திற்கு அர்ச். தோமையாரே வந்தார் என்று நினைத்தால் அத்தகைய அபிப்பிராயம் புத்திக்கு ஒவ்வாததன்று. . . . . அவர் (தோமையார்) முதலில் கொந்தபோரஸ் அரசனிடம் வந்து, பிறகு தென் இந்தியாவிற்குப் போயிருக்கலாம்," என்று **வின்சென்ட் ஸ்மித்** என்ற சரித்திராசிரியர் கூறுகிருர்.

வடமேற்கு பாகங்களில் அக்காலத்தில் கிறீஸ்துவர்களுடைய சபை ஒன்று இருந்திருக்க வேண்டும்.

அர்ச். தமசீன் அருளப்பர், திருச்சபை வேத சாஸ்திரி எழுதி வைத்ததாவது: "அர்ச். வனத்துச் சின்னப்பரும் அர்ச். வனத்து அந்தோனியாரும் **தெபேய்தா** என்னும் வனாந்தரத்தில் தமது சீஷர்களோடு செபதபம் செய்து உத்தம ஜீவியம் சீவித்திருக்கையில், **இந்டஸ்** நதியின் பக்கத்திலுள்ள வனாந்தரத்தில் இந்திய தபோதனர்கள் பெரும்பான்மையோர் இருந்தார்கள்." இக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவரே பேர்போன **பாலாம்** என்பவர்.

ஆனால் பல காரணங்களை முன்னிட்டு, விசேஷமாய் மகமதியர் முதலானவர்களுடைய படையெடுப்புகளால் சீர்குலைந்து போயிருக்க வேண்டும். சிந்து என்ற மாகாணத்தில் **தூமா பகத்** அடியார்கள் (அதாவது தோமை முனியினுடைய அடியார்கள்) என்று தங்களை அழைத்துக்கொள்ளும் **பக்கிரிகள்** (சந்நியாசிகள்) இங்கும் அங்கும் காணப்படுவது குறிப்பிடத் தக்கதாம். ஆகவே அர்ச். தோமையார் சிலகாலம் வட இந்தியாவில் உழைத்தாரென்று கூறுவதற்கு போதிய அத்தாட்சி உள்ளது என்க.

மலையாள நாட்டில்

அர்ச். தோமையார் இந்தியாவின் வடக்குப் பாகத்தில் கிறீஸ்து மதத்தை ஸ்தாபித்ததைக் குறித்து, ஏதாவது சந்தேகம் ஏற்பட்டாலும், அவர் தென் இந்தியாவில் சில இடங்களில் கிறீஸ்து மதத்தை உறுதியாய் ஸ்தாபித்தார் என்பதைக் குறித்து எந்த சந்தேகமும் இருக்க முடியாது.

தென் இந்தியாவில் விசேஷமாய் மேற்குக்கரையோரத்தில் பல்லாயிரக்கணக்கானவர்களை மனந்திருப்பி கிறீஸ்துவர்களாக்கினார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இப்பிரதேசத்தவர்கள் இன்றைக்கும் தங்களை "அர்ச். தோமையார்

கிறீஸ்துவர்கள் "* என்று அழைத்துக்கொள்ளுவது குறிப்பிடத் தக்கது. இவர்கள் பெரும்பாலும் அர்ச். தோமையாரால் மனந் திருப்பப்பட்டவர்களின் சந்ததியார்கள் என்று சொல்லலாம்.

அர்ச். தோமையார் மற்ற நாடுகளில் சுவிசேஷத்தைப் பிர சங்கித்தபின் இந்தியாவில் மலையாளக் கரையில் கி.பி. 52-வது (ஏறக்குறைய) வருஷத்தில் கிராங்கனூர் என்ற துறை முகத் தில் வந்திறங்கிப் பல ஊர்களுக்குச் சென்று பிரசங்கித்து, மலையாள நாட்டில் முக்கியமாக ஏழு இடங்களில் திருச்சபையை ஸ்தாபித்தார் என்றும், தமக்குப்பின் தமது வேலையை தொடர்ந்து நடத்த குருக்களை ஏற்படுத்தினர் என்றும் கடைசி யாய் சுமார் கி.பி. 68-வது வருஷத்தில் மைலாப்பூரில் வேத சாட்சிமுடி பெற்றார் என்றும், இந்த அர்ச். தோமையார் கிறீஸ்துவர்களிடையில் பாரம்பரியமாகச் சொல்லப்பட்டுவருகிறது.

அர்ச். தோமையாருடைய கிறீஸ்துவர்களைப்பற்றிய பாரம் பரியச் செய்திகள், இந்துக்கள் மகமதியர்களிடையில் கூட இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மலையாளத்தில் **பாலையூர்** என்ற ஊரில் ஒரு கிறீஸ்துவ குடும்பத்தாரால் பாது காக்கப்பட்ட மிக பழையதொரு ஏட்டுப் பிரதியில், அர்ச். தோமையாருடைய அப்போஸ்தலிக்கு அலு வல்களைப்பற்றி கூறப்பட்டுள்ள செய்திகளின் சுருக்கம் பின்வரு மாறு :—

"கிராங்கனூரில் வந்து இறங்கின ஆறு மாதங்களில் நமது அப்போஸ்தலர் ராஜாவையும் அவரது குடும்பத்தாரையும் நாற்பது யூதர்களையும் நானூறு இந்துக்களையும் மனந்திருப்பி னர். அவருடைய கைகளிலிருந்து முதலில் குருப்பட்டம் பெற்றவர்களுள், அரசனுடை மருமகன் ஒருவர். அவ

* கி.பி. 1552-ம் ஆண்டில் சரித்திராசிரியராகிய பாரோஸ் என்பவர் எழுதி வைத்தது: "கிராங்கனூரில் போர்த்துகீசியர் வந்திறங்கினபோது பெருந்தொகை யான கிறீஸ்துவர்கள் அங்கிருந்தனர். அவர்கள் 'தோமையார் கிறீஸ்து வர்கள்' என அழைக்கப்பட்டு வந்தார்கள். ஏனெனில் அவர்கள் அப் போஸ்தலராகிய தோமையாரால் மனந்திருப்பப்பட்டவர்களின் சந்ததியார். அவர் பலரைச் சத்திய மறையில் சேர்த்து அவர்களுக்காகச் சில கோவில்களையும் கட்டினர்" என்பதாம்.

ருடைய பெயர் பேத்துரு. இவரோடு தோமையார் கொல்லத்துக்குச்* சென்று அங்கு 2,400 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அங்கிருந்து **சாயல்** என்ற ஊருக்குச் சென்று 2,800 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். அங்கிருந்து **நீராணம்** என்ற ஊரில் கிறீஸ்து சபை ஏற்படுத்தினர். பிறகு **கொக்க மங்கலம்** என்ற ஊரில் 1,500 பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார். **பரூர்** அல்லது **கோட்டக்காவு** என்ற ஊரில் 2,500 பேரை மனந்திருப்பினர். கி.பி. 59-வது வருஷ முடிவில் மைலாப்பூருக்கு வந்தார். திரும்பவும் மலையாளத்திற்குச் சென்று தாம் ஏற்படுத்தின சபைகளைக் கண்காணித்தார். உறுதிப்பூசுதல் பெருதவர்களுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தார். இதன் பின் தமது நாட்டிற்கு வந்தார்.

"நமது ஆண்டவருடைய திருக்காயங்களைத் தொடப் பாக்கியம் பெற்ற அவருடைய கரங்களால், பரிசுத்த சிலுவையடையாளம் போட்டு அவர் செய்த புதுமைகளுக்கு அளவில்லை. இறந்த பின் உயிர்ப்பித்தது 29 பேர். பேய்பிடித்தவர்களை பேயினிடமிருந்து விடுவித்தது 250 பேர். குஷ்ட ரோகத்திலிருந்து குணப்படுத்தினது 330 பேர். குருடர்கள் 250 பேர். திமிர்வாதம் பிடித்தவர்கள் 120 பேர். ஊமையர்கள் 20 பேர். வைத்தியர்களால் கைவிடப்பட்டு சௌக்கியமானவர்கள் 250 பேர். மனந்திரும்பப்பட்ட பிராமணர்கள் 17,490 பேர். வைசியர் 350 பேர். சூத்திரர் 4,280 பேர். மேற்றுணியார் பட்டம் அளித்தது 2 பேர். குருபட்டம் அளித்தது 7 பேர். டீக்கன் பட்டம் அளித்தது 21 பேர்."

இதை 1061-வது வருஷம் ஜூலை மாதம் 2-ம் தேதி பரிசுத்த அப்போஸ்தலராகிய அர்ச். தோமையாருடைய பாதத்தில் பாடலாக எழுதி காணிக்கையாக வைத்ததாக இதன் ஆசிரியர் கூறுகிறர்.

இதில் கூறப்பட்ட ஒவ்வொரு குறிப்பும் அவ்வளவும் உண்மையென்று சொல்லமுடியாவிட்டாலும், இதில் அடங்கியிருக்கும்

---

* அங்கு அவர் கட்டிய கோவில் ஒரு 1,000 வருஷங்கள் இருந்து பின்பு கடலால் கொள்ளப்பட்டதென்றும் சொல்லப்படுகிறது.

பாரம்பரிய பொதுவரலாறு உண்மையென்றே எற்றுக்கொள்ள வேண்டும்.

நம்பூத்திரி பிராமணர்களை மனந்திருப்பும் தொழிலில் அர்ச். தோமையாருக்கு விசேஷ பலன் கிடைத்ததென்று பாரம்பரியம் மட்டுமன்றி இன்னும் மற்றும் பல சரித்திர ஆசிரியர்களும் கூறுவது கவனிக்கத்தக்கது.

அப்போஸ்தலரான அர்ச். தோமையார் கிறீஸ்துவர்களை ஸ்தாபித்த இடங்களுள் **பாலேயூர், கிராங்கனூர்** என்ற இடங்கள் முன்பு மேற்றிராசன இருப்பிடங்களாக இருந்தன. கிராங்கனூரை மேற்றிராசனமாக அர்ச். தோமையாரே எற்படுத்தி **சாந்திப்புஸ்** என்பவரை முதல் மேற்றிராணியாராக நியமித்தார் என்றும் சொல்லப்படுகிறது. **கிராங்கனூர், பாலேயூர், பரூர், கொக்கமங்கலம், நீராணம், சாயல், கொல்லம்** என்ற 7 ஊர்களில் கிறீஸ்துவ சபையை நன்கு ஸ்தாபித்தார் என்பது உறுதியான அபிப்பிராயம்.

இன்றைக்கும் மலேயாளத்தில் **மலேயாட்டூர்** என்ற ஊர் பேர்போன திரு யாத்திரிகள் ஸ்தலமாக இருந்துவருகிறது. மலேமீது இப்போதும் ஒரு கோவில் இருக்கிறது. கர்த்தர் உயிர்த்த திருநாளுக்குப்பின் வரும் ஞாயிற்றுக்கிழமை அன்று கணக்கில்லாத யாத்திரிகர்கள் இப்பொழுதும் செல்லுகிறார்கள். விவாகம் செய்து கொண்டபின் இளம் தம்பதிகள் இங்கு யாத்திரையாகச் செல்லும் பழக்கம் வெகுகாலமாய் இருந்து வருகிறது. அர்ச். தோமையாருக்கு தேவமாதா இம்மலேயின்மீது தரிசனேயானுள் என்ற பழைய பாரம்பரியமே இதற்குக் காரணம்.

கற் சிலுவைகள்

தாம் பிரசங்கித்த அநேக இடங்களில் சிலுவையை ஸ்தாபிப்பது அர்ச். தோமையாருடைய பழக்கமாயிருந்தது. மலேயாளத்தில் கல்லில் செதுக்கப்பட்டு ஸ்தாபிக்கப்பெற்ற சிலுவைகளுள் பின்வரும் மூன்று முக்கியமானவை :—

(1) கோட்டையத்திலுள்ள வலியபள்ளி யில் இடது புறப்பீடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சிலுவை.

(2) அதே கோவிலில் வலது புறப்பீடத்தில் இருக்கும் சிலுவை.

(3) கடமட்டம் என் ஊரில் யாக்கோபித்தர் பிரிவினைகாரர்கள் கோவிலிருக்கும் சிலுவை.

இம்மூன்று கோவில்களும் தற்போது இப்பிரிவினைகாரர்கள் கையில் இருப்பது வருந்ததக்கதேயாம்.

முதல் இரண்டு சிலுவைகளின்மீது பால்வி பாஷையில் சில எழுத்துக்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

அர்ச். தோமையார்மலை என்று சொல்லப்படும் பரங்கிமலை யிலுள்ள மலை கோவிலில் பீடத்தின்மீது அமைக்கப்பட்டிருக்கும் சிலுவையின்மீது அதே பாஷையில் எழுத்துக்கள் இருக்கின்றன.

4

சோழ மண்டலக்கரை—தமிழ் நாட்டில்

அர்ச். தோமையார் சுமார் 17 வருஷங்கள் இந்தியாவில் உழைத்தார் என்றும் அவற்றுள் ஒரு 4 வருஷங்கள் வட இந்தியா—சிந்து நாட்டிலும், 6 வருஷங்கள் மலேயாளத்திலும், ஒரு 7 வருஷங்கள் மைலாப்பூரிலும் அதைச்சுற்றியுள்ள பிரதேசத்திலும் (தமிழ் நாட்டிலும்) உழைத்தார் என்று ஒருவாறு ஊகித்துச் சொல்லப்படுகிறது.

ஆனல் மலேயாளத்தில் மட்டுமே அவர் ஸ்தாபித்த கிறீஸ்து மதம் அழிந்துபோகாமல் ஒருவாறு நிலேத்து நின்றது. மற்ற இடங்களில் ஏறக்குறைய பேரே இல்லாமல் போய்விட்டது.

இதன் காரணம் என்னவெனில் ;

(1) மலேயாளத்தில் மனந்திருப்பப்பட்ட கிறீஸ்துவர்களுக்கும் மேல் நாட்டு கிறீஸ்துவர்களுக்கும் ஏறக்குறைய ஆரம்பத்திலேயே இருந்துவந்த தொடர்பேயாகும். உதாரணமாக கி.பி. 190-ம் வருஷத்தில் எஜிப்து தேசத்து அலெக்ஸாந்திரியா பட்டணத்தின் மேற்றிராணியாராகிய **டெமட்ரீயுஸ்** என்பவரிடம் இந்தியாவில் இருந்த கிறீஸ்துவர்கள் தங்களுக்குக் கிறீஸ்து நாதருடைய போதனேகளே எடுத்துரைக்க ஒரு போதகரை அனுப்பவேண்டுமென்று விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அப்போது அலெக்ஸாந்திரியாவில் பேர் பெற்ற ஞானியாகிய **பந்தேனுஸ்** என்பவர் தாமே இந்தியாவுக்குப் போவதாக ஒப்புக்கொண்டு அங்ஙனமே இந்தியாவுக்கு வந்து உழைத்ததாக சரித்திரம் கூறுகிறது.

(2) கி.பி. 345-ம் ஆண்டில் **தோமாஸ் கான** என்ற வியாபாரி சிரியா நாட்டிலிருந்து கிறீஸ்துவர்கள் சிலரோடு (திருவாங்கூரில்) மலேயாள நாட்டில் குடியேறினர்கள்.

(3) கி.பி. 880-ம் ஆண்டில் **சாப்போர் இசோ, ப்ரோத்தோ** என்ற இரு சகோதரர்கள், மலையாளத்திற்கு வந்து அநேக கோவில்களைக் கட்டிப் பலரை மனந்திருப்பினார்கள். விசேஷமாக கொல்லத்தில் திருச்சபையை நன்கு ஸ்தாபித்தார்கள்.

(4) 16-ம் நூற்றாண்டுவரை **சிரியா** கிறீஸ்துவர்கள் தென்னிந்தியா கிறீஸ்துவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சரித்திரம் சாட்சி.

(5) 12-ம் நூற்றாண்டில் மார்ஜோன் என்பவர் இரண்டாம் **கலிஸ்துஸ்** என்ற பாப்பரசரிடமிருந்து அதிமேற்றாணியார் (பாலியம்) சின்னம் பெற்று இந்தியாவுக்கு வந்து கிறீஸ்துவர்களை ஆண்டார்.

(6) 1329-ம் ஆண்டில் 22-ம் அருளப்பர் பாப்பானவர் கொல்லத்துக்கு மேற்றிராணியாரை அனுப்பினார். இப்படி பல முறைகளில் மலையாள கிறீஸ்துவர்களை கண்காணிக்க வசதிகள் ஏற்பட்டதால் கிறீஸ்துமதம் அங்கு நிலைத்து நின்றது தென்க. வட இந்தியாவிலும், தமிழ் நாட்டிலும் இத்தகைய தொடர்புகள் இல்லாதபடியால் காலக்கிரமத்தில் கிறீஸ்து சபை சீர்குலைந்துபோனதில் ஆச்சரியமொன்றுமில்லை. சோழமண்டலக்கரையில்—தமிழ் நாட்டில் அர்ச். தோமையார், விசேஷமாக பிரசங்கித்து உழைத்தது மைலாப்பூரிலும் அதைச்சுற்றியுள்ள பிரதேசத்திலும் என்னலாம். மைலாப்பூர், அருகாமையிலுள்ள சின்னமலை, பெரியமலை என்ற மூன்று இடங்களில் மட்டுந்தான் அவருடைய அப்போஸ்தலிக்கு ஊழியத்தின் ஒரு சில அடையாளங்கள் இன்றும் காணப்படுகின்றன.

மைலாப்பூர் — கல்லறை

அர்ச். தோமையார் இந்தியாவில் வேதசாட்சியாக மரித்து அடக்கம் செய்யப்பட்டது **கலமீனா** அல்லது **கலமீனூர்** எனப்பட்ட இடம் என்று வெகுகாலமாக சொல்லப்பட்டு வருகிறது. இது தற்போது மைலாப்பூர் என்று அழைக்கப்படும் இடத்தையே குறிக்கும் என்பது சரித்திர ஆராய்ச்சியாளருடைய அபிப்பிராயம். **கலமீனூர்** என்று என் அழைக்கப்பட்டதென்று



அர்ச். தோமையார் மேற்றிராசனக்கோவில், ஒரு பக்கத்திலிருந்து எடுத்த படம்.



திருமயிலை, அர்ச். தோமையார் மேற்றிராசன தேவாலயத்துப் பெரிய பீடத்தின் மீதிருக்கும் பலவர்ணக் கண்ணாடி. நமதப்போஸ்தலர் ஆண்டவருடைய திருவிலாக் காயத்தில் விரல் விடும் காட்சி சித்தரிக்கப்பட்டிருக்கிறது.

திட்டமாக சொல்லமுடியாமலிருக்கிறது. **காலா** என்னும் மீனுக்கு இவ்விடம் பேர் போனதாயிருந்ததால் இங்ஙனம் அழைக்கப்பட்டிருக்கலாம்.

பெயரைப்பற்றி அபிப்பிராயபேதம் இருந்தாலும் அர்ச். தோமையார் மைலாப்பூர் என்று இப்போது அழைக்கப்படும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார் என்ற உண்மையை எண்பிக்க போதிய அத்தாட்சிகள் உள்ளன.

(1) இந்தியாவிலும் சரி, மற்ற எந்த நாட்டிலும் சரி மைலாப்பூர் தவிர வேறு எந்த ஊரும் அர்ச். தோமையாருடைய கல்லறையைப்பற்றிய உரிமையைக் கொண்டாடாமல் இருப்பதே ஒரு முக்கிய அத்தாட்சியாகும். அர்ச். தோமையாரைப்பற்றி அவ்வளவு பிரமாதமாக நினைத்துப்பேசும் அர்ச். தோமையார் கிறீஸ்துவர்கள் கூட தொன்று தொட்டு மைலாப்பூரில் அவருடைய கல்லறையைத் தரிசிக்கவேண்டுமென்று திருயாத்திரையாக வந்து கொண்டிருப்பது நிராகரிக்கக்கூடிய அத்தாட்சியன்று. தங்களுடைய நாட்டிலோ அல்லது வேறு எந்த ஊரிலோ அவருடைய கல்லறை இருந்திருந்தால், மைலாப்பூரை நாடி வந்திருக்கவேண்டிய அவசியமென்ன?

(2) மேலும் அர்ச். தோமையார் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் பெரிய சந்நியாச மடம் ஒன்று இருந்ததாக சரித்திரக் குறிப்புக்கள் காணப்படுகின்றன. கி.பி. 6-வது நூற்றுண்டில் **தூர்ஸ் நகரத்து மேற்றிராணியார்** அர்ச். கிரேகோரியார் எழுதிவைத்ததாவது ; " அர்ச். தோமையார் இந்தியாவில் வேதசாட்சியானுர். அவர் அடக்கம் செய்யப்பட்ட அந்த இடத்தில் ஒரு துறவிகள் மடமும் ஒரு பெரிய கோவிலும் இருக்கிறது. அது விலையுயர்ந்த காணிக்கைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. **அவ்விடங்களைக் காணச் சென்ற தேயோதோர்** என்பவர் எனக்கு இதைச் சொன்னுர்."

(3) கி.பி. 883-வது ஆண்டில் இங்கிலாந்து தேசத்து அரசன் மகா **ஆல்பிரட்** விலையுயர்ந்த காணிக்கைகளை **சிகேல்ம்** என்ற மேற்றிராணியார் வழியாக இந்தியாவில் அர்ச். தோமையாரிடம் செலுத்தினதாகச் சரித்திரம் கூறுகிறது.

(4) கி.பி. 4-வது நூற்றுண்டில் **இந்தியாவில் அர்ச். தோமையார் சந்நியாச மடத்தைச் சார்ந்த குருவும் சந்நியாசியும்** எனத் தம்மை அழைத்துக்கொள்ளும் **சாதோ** என்பவர் **பாக்தாத்** என்று இப்போது அழைக்கப்படும், **அன்பார்** என்ற நகரத்திலிருந்து **மார்யோஹன்** என்ற சந்நியாசி இம்மடத்தை தரிசிக்கவந்ததாக கூறியுள்ளார்.

(5) கி.பி. 1122-ம் ஆண்டில் மூன்றுவது **மார்ஜான்** என்னும் அதிமேற்றிராணியார் இந்தியாவிலிருந்து உரோமைக்குச் சென்று பாப்பானவர் முன்னிலேயிலும் கர்தினல்மார் முன்னிலேயிலும் மைலாப்பூர் அர்ச். தோமையார் கல்லறையண்டை நடக்கும் பல புதுமைகளைப்பற்றி எடுத்துரைத்தார்.

(6) கி.பி. 1225-ம் ஆண்டில் **ஓடெரிக்** என்ற பிரான்சீஸ்கன் சந்நியாசியாரும், 1350-ல் **ஜான் மரிஞ்ஞோலியும்** 1450-ல் **நிக்கோலாஸ் கோந்க்தி** என்பவரும் இங்ஙனமே மைலாப்பூரில் தோமை அப்போஸ்தலருடைய கல்லறையைக் குறிப்பிட்டு எழுதுகிறூர்கள்.

(7) கி.பி. 1247-ம் ஆண்டில் (பிற்காலத்தில் சீனுவில் பெக்கின் நகர் மேற்றிராணியாரான) **மோந்த்தே கொர்வீனே** என்னும் வேத போதகர் தான் இந்தியாவில் அர்ச். தோமையாருடைய கோவில் அருகாமையில் 13 மாதங்கள் தங்கியிருந்ததாகச் சொல்லுகிறூர்.

(8) கி.பி. 1293-ம் ஆண்டில் வெனிஸ் நகரைச் சேர்ந்த **மார்க்கோ போலோ** என்ற தேச யாத்திரி பலநாடுகளைச் சுற்றிப் பார்த்து மைலாப்பூருக்கு வந்தார். அவர் கூறுவதாவது: "மகமதியர்கள்கூட அர்ச். தோமையாரைப் பெரிதும் மதித்துப் பாராட்டுகிறூர்கள். அர்ச்சியசிஷ்டவர் என்ற அர்த்தங் கொண்ட **அவாரியன்** என்று அவரை அழைக்கிறூர்கள். கிறீஸ்துவ திரு யாத்திரிகள் அவர் கொல்லப்பட்ட இடத்திலிருந்து மண்ணேயெடுத்துக் கொண்டுபோய் பலவிதமான காய்ச்சல்கள் வரும்போது உபயோகப்படுத்துகிறூர்கள். கடவுளுடைய அருளாலும், அர்ச்சியசிஷ்டவருடைய மன்றுட்டாலும் அவர்களுடைய வியாதிகள் நீங்குகின்றன."

(9) கி.பி. 13-வது நூற்றுண்டில் **பஸ்ரா** என்ற நகர் அதி மேற்றிராணியாராயிருந்த **மார் சாலமோன்** என்பவர் சொல்வதாவது, "தோமையார் இந்தியர்களுடைய நாட்டில் மாலூப் என்ற பட்டணத்தில் அடக்கம் செய்யப்பட்டார்," என்று மற்றவர்கள் சொல்லுகிறுர்கள். இந்த **மாலூப்** என்ற பட்டணமும் மைலாப்பூரும் ஒன்றே.

(10) கி.பி. 1504-ம் ஆண்டில் நெஸ்டோரியர் பிரிவினையைச் சேர்ந்த நான்கு மேற்றிராணிமார்கள் **பாக்தாத்** நகரிலிருந்து மலையாளத்திற்கு வந்தார்கள். அவர்கள் எழுதிய ஒரு அறிக்கையில் "அப்போஸ்தலராகிய தோமையார் கல்லறையின் சுற்றுப்புறத்தில் கிறீஸ்துவர்கள் திரும்பவும் குடியேறத் தொடங்குகிறுர்கள். அவர்கள் அக்கல்லறையை நல்ல நிலைமையில் வைத்துக்கொண்டிருக்கிறுர்கள்" என்ற வார்த்தைகள் காணப்படுகின்றன.

இங்ஙனம் உள்நாட்டவரும் வெளிநாட்டவரும் மைலாப்பூரையே அர்ச். தோமையாருடைய அடக்க ஸ்தலமாக எண்ணி வந்ததும் அதைத் தரிசிக்க திரு யாத்திரையாய்ச் சென்றதும், அக்கல்லறையை யொட்டிச் செழித்தோங்கிய சந்நியாச மடமும், அர்ச். தோமையார் மைலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டார் என்ற உண்மையை எண்பிக்கப் போதிய சான்றுகளாம்.

ஆரம்பத்திலிருந்தே முகமதிய யாத்திரிகர்கள் கூட இக் கல்லறையை தரிசிக்கவந்ததும் குறிப்பிட தக்கது.

எதெஸ்ஸா நகருக்கு . . .

கி.பி. மூன்றுவது நூற்றுண்டின் நடுவில் அர்ச். தோமையாருடைய சரீரம் மைலாப்பூரிலிருந்து சிரியா நாட்டில் **எதேஸ்ஸா** என்ற நகருக்கு கொண்டு போகப்பட்டது. இதைப் பற்றி அர்ச். **எப்ரேம்** நான்காம் நூற்றுண்டில் எழுதி வைத்தார். இதைக்குறித்து பின்வரும் குறிப்புகள் தெரியவருகின்றன.

கி.பி. 222–225-ம் வருஷங்களில் 9-ம் **ஆப்கர்** என்பவன் எதேஸ்ஸாவின் அரசனுயிருந்தான். அவன் கிறீஸ்து

வனுணபின் கத்தோலிக் வேதமே நாட்டின் வேதமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அக்காலத்தில் **மைலாப்பூர் எதேஸ்ஸா மேற்றிராசனத்தைச் சேர்ந்திருந்ததுமன்றி** அவ்வூர் சந்நியாசிகள் சிலர் மைலாப்பூரில் மடம் ஸ்தாபித்து* வேத போதக அலுவல் செய்து வந்தனர்.

அப்போஸ்தலர் கல்லறையைப் பாதுகாத்து வந்தவர்களும் அவர்களே. அர்ச். தோமையாரின் வரலாற்றையும், அவர் வேத சாட்சியானதையும் கேட்ட அரசன் அவரது எலும்புகளை அதிக வணக்கமாக கொண்டாடும் பொருட்டுத் தனது இராச்சியத்திற்கு எடுத்துக் கொண்டுபோக விரும்பி, அதற்காக **காபின்** என்னும் ஒரு வர்த்தகனை மைலாப்பூருக்கு அனுப்பினுன். அரசனுல் அனுப்பப்பட்ட தூதனுனதால், மேற்கூறிய சன்னியாசிகள் அர்ச். தோமையாருடைய எலும்புகளை அவன் மூலமாக எதேசாவுக்கு அனுப்பினுர்கள். ஆனுல் மைலாப்பூரிலிருந்த சந்நியாசிகளுடையவும் கிறீஸ்துவர்களுடையவும் வேண்டுகோளின்பேரில் அப்போஸ்தலரைக் குத்தின ஈட்டியின் சிறு பாகமும் அதன் நுனியில் ஒட்டியிருந்த சிறு எலும்புத் துண்டும் அக்கல்லறையிலேயே விட்டு வைக்கப்பட்டன. பல நூற்றுண்டுகளுக்குப் பின் போர்த்துகீசியர் மைலாப்பூர் வந்தகாலை இத்திருப்பண்டத்தின் மூலமாகவே அப்போஸ்தலரின் கல்லறையைக் கண்டு கொண்டனர் என்னலாம். எதேஸ்ஸாவில், முதலில் ஒரு கோவிலிலிருந்து இன்னெரு கோவிலுக்கு மாற்றிக்கொண்டே இருந்தார்கள். கடைசியாக அர்ச். தோமையாருடைய பேரால் கட்டப்பட்ட ஒரு பெரிய தேவாலயத்தில் அவருடைய சரீரம் வணக்கத்தோடு வைக்கப்பட்டது: அங்கேயே பல நூற்றுண்டுகள் கிறீஸ்துவர்களால் மிக மரியாதையுடன் காப்பாற்றப் பட்டுவந்தது.

கி.பி. 12-வது நூற்றுண்டில் எதேஸ்ஸா நகரமும் மகமதியர்களுடைய படைத்தாக்குதலால் பாழடைந்துபோயிற்று. கிறீஸ்துவர்கள் சிலர் நமது அப்போஸ்தலருடைய சரீரத்தைத் தேவாலயத்திலிருந்து எப்படியோ காப்பாற்றிவிட்டார்கள்.

---

*மைலாப்பூரில் பெரியதொரு சன்னியாச மடம் எப்படி வந்ததென்ற கேள்விக்குப் பதில் இது வென்று சொல்லலாம்.

கியோஸ் தீவுக்கு....

மகமதியர்களுடைய படைகளால் பெரும் ஆபத்து நேரலாம் என்று கிறீஸ்துவர்கள் பயந்து, கடலில் வெகு தூரத்தி லிருந்த **கியோஸ்** என்ற தீவுக்கு எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். மாற்றப்பட்ட சம்பவங்களுடைய விபரம் தெரிய வில்லை. அங்கே ஒருவித கல்லறையைக் கட்டி அதில் அவ ருடைய சரீரத்தைவைத்து அவருடைய உருவமும் பெயரும் தாங்கிய ஒரு கற்பலகையை அக்கல்லறையின்மேல் வைத்து மூடிவிட்டார்கள்.

ஓர்ட்டோனு நகருக்கு....

இந்த இடத்தில் கி.பி. 1258-வது வருஷம் வரைக்கும் இருந்தது. அவ்வருஷத்தில் **தரான்தோ** நகர் இளவரசன் கட்டளையின்மீது படையெடுப்பு ஒன்று நிகழ்ந்தது. படைக் கப்பல்கள் கியோஸ் தீவை நோக்கி வரவே பட்டணத்து வாசிகள் ஊரைவிட்டு ஓடினார்கள். அர்ச். தோமையாருடைய சரீரத்தை கல்லறையில் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து எடுத்து ஓர்ட் டோனு நகர் கப்பல் தலைவன் **லேயோ** என்பவனால் இத்தாலி யாவிலுள்ள ஓர்ட்டோனுவுக்குக் கொண்டுவரப்பட்டது. அந் நாளிலிருந்து இதுவரைக்கும் அங்கேயே பல அற்புதச் செயல் களுக்குக் காரணமாக இருந்துவருகிறது.

தற்போது ஓர்ட்டோனு நகரிலுள்ள இத்திருப்பண்டம் உண் மையாகவே அர்ச். தோமையாருடைய சரீரம் என்பதற்கு ஒரு விசேஷ அத்தாட்சியிருக்கிறது.

அர்ச். பிர்ஜித்தா என்ற புண்யவதிக்கு இந்நகரில் நம தாண்டவர் தந்த ஒரு காட்சியில் கூறியதாவது*, "எனது அப்போஸ்தலருடைய திருப்பண்டம் இந்தக் கோவில் பீடத்தில்

---

* நமது ஆண்டவர், அர்ச்சியசிஷ்டவர்களின் பண்டங்களைத் தம்பெரும் பொக்கிஷங்களாகப் போற்றிப் பேசும் சந்தர்ப்பத்தில் இங்ஙனம் கூறுகிருர்.

இருக்கும் அளவுக்கு* வேறெங்குமில்லை. ஏனெனில் முதலில் என் அப்போஸ்தலருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்ட பட்டணம் (எதிரிகளால்) தாக்கப்பட்டு சிதைவுற்றபோது, என் சிநேகிதர்கள் சிலர் மூலமாக என் உத்தரவின் மீது இந்த நகருக்குள் கொண்டுவரப்பட்டு, இப்பீடத்தில் ஸ்தாபகம் செய்யப்பட்டது, என்ற இவ்வார்த்தைகள் விசேஷமாக குறிப்பிடத்தக்கன.

1556-ம் வருஷத்தில் அர்ச். தோமையாருடைய சரீரம் பாதுகாக்கப்பட்டிருந்த தேவாலயம் துருக்கியரால் தாக்கப்பட்டு சேதமுற்றது. என்றாலும் அப்போஸ்தலருடைய சரீரம் ஆச்சரியமானவிதமாய் காப்பாற்றப்பட்டது. முதலில் தலையின் ஓடு காணப்படவில்லை. தேடிப்பார்த்தபின் ஒரு கனமான பீடக் கல்லின்கீழ் காணப்பட்டது.

பயங்கரமான பூமி அதிர்ச்சியொன்று பிற்காலத்தில் ஏற்பட்டபோதும் அங்ஙனமே ஆச்சரியமான முறையில் அப்போஸ்தலருடைய சரீரம் காப்பாற்றப்பட்டது.

சமீபகாலத்தில் இரண்டாம் உலக யுத்தத்தின்போது, தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ இத்தேவாலயம் ஜெர்மானியரால் வெடி மருந்தால் தாக்கப்பட்டது. தேவாலயத்தின் பெரும்பாகம் சேதமுற்றபோதிலும் அப்போஸ்தலருடைய திருபண்டங்கள் முன் ஜாக்கிரதையாய் காப்பாற்றப்பட்டன.

---

* அப்போஸ்தலருடைய சரீரம் முழுதும் ஓர்ட்டோனாவுக்குக் கொண்டுபோகவில்லை என்று இதிலிருந்து புலப்படுகிறது. எதேஸ்ஸாவிலிருந்த சடலம் முழுதும் ஓர்ட்டோனாவுக்குக் கொண்டுபோகப்பட்டது என்று வைத்துக்கொண்டால் அப்போஸ்தலருடைய மீதி சடலம் மைலாப்பூரிலேயே இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க வேண்டுமன்றோ !

"இப்பொக்கிஷத்தைப்பற்றிப் பெரிதும் வியப்புற்றேன். அவருடைய (தோமையாருடைய) பொக்கிஷம் முன்பு சிறிதாயிருந்தது. அதிலிருந்து யாரும் ஒன்றும் எடுத்துச் செல்லவில்லையாயினும் சிறிதாகவே யிருந்தது," என்று அர்ச். எப்ரேம் கி, 4-ம் நூற்றாண்டில் பாடிய ஒரு பாடலிலிருந்து **டாக்டர் பிக்கெல்** என்பவர், "இவ்வடியிலிருந்து, அர்ச். தோமையாருடைய சரீரம் முழுவதும் எதேஸ்ஸாவுக்குக் கொண்டுபோகவில்லையென்றும், ஒரு பாகத்தைமட்டும் எடுத்துச் சென்றார்களென்றும், மீதியை இந்தியாவிலேயே விட்டுவிட்டார்களென்றும் புலனாகிறது" என்று ஊகிக்கிறார்,

இதற்கேற்ப, போர்த்துகீசியர் கல்லறையைத் தோண்டிய போது எலும்புகள் சில காணப்பட்டது சரித்திரக்குறிப்புகளோடு பொருத்தமாயிருக்கிறதன்றோ !

5

போர்த்துகீசியர் வந்தபின் . . . .

அர்ச். தோமையார் கூறியதாகச் சொல்லப்படும் தீர்க்கதரிசன மொழியின்படி தாம் இந்தியாவில் ஸ்தாபித்த சத்திய திருச்சபையைப் புதுப்பித்து செழிப்பிக்க கடவுள் ஏற்பாடு செய்யலானார். அவர் ஸ்தாபித்த கிறீஸ்துவசபை மலையாளத்தில் தவிர மற்றப் பாகங்களில் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. கடவுளால் குறிக்கப்பட்ட காலத்தில் வேதபோதகர் வரலானார்கள். தெய்வாதீனமாக போர்த்துகீசிய நாட்டினர் இந்தியாவுக்கு கடல் மார்க்கமாக வழி கண்டுபிடித்து வந்து சேர்ந்தார்கள். போர்த்துகீசியர் இந்தியாவுக்கு வந்தபோது (மைலாப்பூருக்கு) அர்ச். தோமையார் இருந்த இடத்திற்கு **பெத்தூமா** அல்லது தோமையாருடைய பட்டணம் என்ற பெயர் வழங்கிற்று.

மைலாப்பூர்* கல்லறையிலிருந்து அர்ச். தோமையாருடைய சரீரம் எதேஸ்ஸாவுக்கும், மற்ற இடங்களுக்கும் போனபின் மைலாப்பூரிலிருந்த கல்லறைக்கு என்ன நேரிட்டது என்ற கேள்விக்கு விவரமாகப் பதில் சொல்ல முடியவில்லை. முன் கூறியதுபோல கல்லறையின் மேல் அழகிய பெரியதொரு ஆலயமும், அதையடுத்து ஒரு சன்னியாச மடமும் இருந்த தென்றும் அவருடைய கல்லறை பட்டணத்து வாசிகளால்†

---

* மைலாப்பூர் என்று ஏன் பெயர் வழங்கிற்று என்ற கேள்விக்குப் பதில் பலவாறு சொல்லப்படுகிறது. மயில்களுக்குப் பேர் போன இடமாயிருந்ததென்று சிலர் சொல்லுகிறார்கள். **மயிலாப்புரம்** என்று வழங்கினமையால், **மலைப்புரம்** என்றும் திருந்தி இருக்கலாம். சின்ன மலை—பெரிய மலை இப்பட்டணத்தோடு தொடர்பு கொண்டிருந்தமையால் இங்ஙனம் வந்திருக்கலாம்.

† அவர்கள் எப்போதும் கிறீஸ்துவர்களாய் இருந்தார்களா? என்ற கேள்விக்கும் தக்க பதில் இல்லை. போர்த்துகீசியர் வந்தபோது, ஒரு மகமதியன் கோவில் விளக்கு ஏற்றிவைக்கும் வேலையை செய்துகொண்டிருந்தானென்று சொல்லப் படுகிறது. அதிலிருந்து ஊகித்துக் கொள்ளவேண்டியதென்னவெனில் அக் காலத்தில் அங்கு கிறீஸ்துவர்கள் இருந்திருக்க முடியாது என்பதே.

மிகப் பத்திரமாகக் காப்பாற்றப்பட்டு வந்ததென்றுமட்டுமே சொல்லலாம்.

கி.பி. 16-வது நூற்றுண்டில் போர்த்துகீசியர் இந்தியாவுக்கு வந்தபின் கல்லறையைப் பற்றி நமக்குச் சில விஷயங்கள் தெரியவருகின்றன. இவ்விவரங்களைப்பற்றிய உறுதியான அத்தாட்சிப் பத்திரங்கள் இன்றைக்கும் ரோமாபுரியில் பத்திரமாக வைக்கப்பட்டிருக்கின்றன.

டியோகோ fபெர்னுண்டஸ் என்ற பெயர் கொண்டு நற்குண நடவடிக்கையோடு விளங்கிய ஒரு நல்ல போர்த்துகீசியர், அர்ச். தோமையாருடைய கல்லறையைத் தோண்டிப் பார்த்தபோது, கண்டதைக் குறித்தும் பட்டணத்து வாசிகளிடமிருந்து கேட்டதைக் குறித்தும் சத்தியம் செய்து எழுதித்தந்த வாக்குமூலமே மேற் கூறப்பட்ட பத்திரங்கள்.

உரோமாபுரி வரைக்கும் இப்பத்திரங்கள் போய்ச் சேர்ந்ததிலிருந்தே அவை உண்மையானவையென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம். அந்நாளில் அர்ச். தோமையார் கோவிலுக்குப் பங்கு குருவாயிருந்த **கஸ்ப்பார் கொய்லியோ** சுவாமியாருடைய தூண்டுதலின் பேரிலும் அவர் முன்னிலையிலும் செய்யப்பட்ட சத்திய வாக்குமூலத்தின் கருத்து (சுருக்கம்) பின் வருமாறு :—

"கி.பி. 1517-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் **பாஸ்த்தியான்வ் fபெர்னுண்டஸ்** என்பவரோடும் அர்ச். தோமையார் நகருக்கு நான் வந்தேன். அப்போஸ்தலர் தோமையாருடைய இருப்பிடத்தைக் காணும்படி, அவருடைய கல்லறையிருக்குமிடத்திற்கு அவர்கள் என்னை அழைத்தார்கள். வந்தபோது கோவிலைச்சுற்றி ஏராளமாகப் பெரிய முட் செடிகள் வளர்ந்திருப்பதையும், கோவிலின் பெரும்பாகம் இடிந்துகிடப்பதையும் பார்த்தேன். அர்ச். தோமையாரால் கட்டப்பட்ட பழைய சிறு கோவில்மட்டும் அப்படியே இருந்தது. பீடத்தின் சுவிசேஷப் பக்கத்தில் இருந்த அப்போஸ்தலருடைய கல்லறையும் அப்படியே இருந்தது. பீடத்தின் நிருபப்பக்கத்தில் இன்னெரு



அர்ச். தோமையாரை ஈட்டியால் குத்திக்கொன்ற காட்சி. 17-வது நூற்றுண்டில் சித்தரிக்கப்பட்ட படம். இப்போது இது அர்ச். தோமையார் மலை (பரங்கிமலை)க் கோவிலில் பெரிய பீடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பீடம் இருந்தது. அங்கே கிறீஸ்துவனாய் மனந்திரும்பிய அரச னொருவனுடைய கல்லறையிருந்தது. இக்கல்லறை இருந்த இடத்தையும் கோயில் முழுமையுமே தோண்டிப்பார்த்தோம்.

"சில நாட்களுக்கு முன்பு குருடனாயிருந்து அப்போஸ்தல ருடைய செபத்தால் தன்னுடைய பார்வையை மீளவும் பெற்ற ஒரு மகமதியன் அங்கு இருந்தான். இரண்டு வருஷங்களாக மட்டுமே தான் மகமதியனாக இருப்பதாகவும் அதற்குமுன் இந்துவாய் இருந்ததாகவும் தன்னுடைய முன்னோர் களும் இந்துவாய் இருந்ததாகவும் தனக்கு அப்போது 60 வயது என்றும் அப்போஸ்தலருடைய இருப்பிடத்தில் விளக்கு* எற்றிவைக்கும் வேலை தனக்குக் கொடுக்கப்பட்டதென்றும் தான் அர்ச். தோமையார் கிறீஸ்துவர்களுடைய சந்ததியில் பிறந்தவனென்றும் கூறினான். மேலும் அப்போஸ்தலருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டிருந்த இடத்தை எங்களுக்குக் காட்டி, மரித்தபின் அப்போஸ்தலரை ஒரு லீக் (சுமார் நான்கு மைல்) தூரத்திலிருந்து கொண்டுவந்து அடக்கம் செய்த சம் பவத்தையும் விளக்கிச் சொன்னான். ஒரு கல்லின்மீது பதிந் திருந்த அவரது பாதச் சுவட்டையும் எங்களுக்குக் காண் பித்தான். அதைப் பார்த்தபோது களிமண்மீது புதிதாய் பதிக்கப்பட்ட ஒரு பாதச் சுவட்டைப்போலவே இருந்தது. உளியி னால் செதுக்கப்பட்ட ஒரு பாதச்சுவட்டைப் போலன்றி இயற் கையாகவே அமைந்தவாறு காணப்பட்டது. அவர் கொல் லப்பட்டபொழுது கீழே விழுகையில் கல்லில் பதிந்த முழங் காலின்† அடையாளத்தையும் அவன் எங்களுக்குக் காண்பித் தான். . . . . .

---

* அர்ச். தோமையாருடைய கல்லறையண்டை விளக்கு எற்றிவைக்கும் வழக்கம் வெகு காலமாக இருந்து வருவதாகத் தோன்றுகிறது. சில சமயங்களில் எண்ணெய் இல்லாமலே விளக்குகள் புதுமையாக எரிந்ததாகவும் சொல்லப்படுகிறது.

† இதைக்குறித்து **காத்ரீன் எமெரிக்** என்ற புண்யவதிக்கு ஆண்டவர் அருளிய காட்சிகளில் ஒரு குறிப்பு காணப்படுகிறது. "தோமையார் இந்தி யாவில் ஒரு கல்லை எற்படுத்தி அதன்மேல் முழந்தாளிட்டு செபம் செய்து வந்ததையும், அதன்மேல் அவருடைய முழங்காலின் அடையாளம் பதிக்கப் பெற்றதையும் நான் காட்சியில் கண்டே"னென்று அப்புண்யவதி கூறுகிறாள்.

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் **மனுவெல் தெ fபெரியா** என்ற கப்பல் தலைவன் **வின்செண்ட் fபெர்னுன்டெஸ்** என்ற கொல்லத்துக்காரனையழைத்து அப்போஸ்தலருடைய வீட்டைத் திருத்தி அமைப்பதற்கு வந்து சேர்ந்தான். **அந்தோனியோ ஜில்** என்ற குருவானவருடைய கையில் இவ்வேலை ஒப்படைக்கப் பட்டது. . . . . .

அப்போஸ்தலருடைய கல்லறையைத் தோண்டி எடுத்தபோது படத்தில் குறிக்கப்பட்டிருப்பதுபோல் காணப்பட்டது.

அடியில் மண்டை ஓட்டுத்துண்டுகளும் முதுகெலும்பு சிலவும் மற்ற எலும்புகளும் அகப்பட்டன. ஒரு மட்குடமும் கிடைத்தது. அதில் நிறைய மண் இருந்தது. இவ்வெலும்புகள் ஒரு பெட்டியில் பத்திரப்படுத்தி ஒளித்துவைக்கப்பட்டன. இரும்பினுல் செய்யப்பட்ட ஈட்டிமுனையும் கிடைத்தது. எலும்புகளையெடுத்து குருவானவர் ஒரு பெட்டியில் வைத்துப்பூட்டிச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுவந்து பத்திரப்படுத்தினுர்.

"இரண்டு வருஷங்களுக்குப் பிறகு போர்த்துக்கல் தேசத்திலிருந்து **பென்டியாது** சுவாமியார் மைலாப்பூருக்கு வந்தார். முன்பு பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருந்த அவ்விடத்தில், அப்பரிசுத்த எலும்புகளுக்குச் சரியான பாதுகாப்பு இல்லையென்று நினைத்தவராய் பூட்டியிருந்த பூட்டுகளையுடைத்து எலும்புகளையெடுத்து ஒரு மரப்பெட்டியில் வைத்து இரகசியமான இடத்தில் பத்திரப்படுத்தினுர். அந்த இடம் **ரோட்ரீகோலுாயிஸ்** என்ற ஒருவருக்குமட்டுமே தெரியும்.

"1525-ம் ஆண்டில் இந்த **ரோட்ரீகோலுாயிஸ்** என்பவர் மூலமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்த இடத்தைக் கண்டுபிடித்து, அதைத் திரும்பவும் தோண்டி எடுக்க பெட்டிமுழுதும் பாழடைந்துபோயிருக்கக் கண்டார்கள். வேறு பெட்டியில் வைத்து அப்பெட்டியையும் சாவியையும் பங்கு குருவானவரிடத்தில் கொடுத்துவிட்டார்கள்." (இதன்பின் என்ன நடந்ததென . . . . 9-ம் அதிகாரத்தில் காண்க).

தியோகோ பெர்னுன்டெஸ் தந்த இந்தச் சத்திய வாக்கு மூலத்தில், விசேஷமாய் குறிப்பிடத்தக்கன இரண்டொன்று உள :

(1) கல்லறை தரையில் மேலாகவே இருப்பதற்கு பதிலாக ஏறக்குறைய பதினைந்து அடிக்குக் கீழே இருப்பது ஆச்சரியமாய் இருக்கிறது. யாரும் தொடாதவண்ணம் ஒளித்து வைக்கப் பட்டிருக்கும் ஒரு பொக்கிஷத்தைப்போல, ஆரம்பத்திலேயே அப்போஸ்தலருடைய சரீரம் வெகு சாக்கிரதையாக அதிக ஆழத்தில் புதைக்கப்பட்டதென்று சொல்வதா? அல்லது காலக்கிரமத்தில் சிறிது சிறிதாக, பூமியின்மட்டம் பழையகாலத்து நகரங்களில் நிறைவேறினது போலவே உயர்ந்துபோயிற்று என்று சொல்வதா? எனப் புலப்படவில்லை. எதுவாயினும் கிறீஸ்து சகாப்தத்தின் ஆரம்பத்திலிருந்தே நமது அப்போஸ் தலருடைய கல்லறை மைலாப்பூரில் இருந்ததென்ற பாரம் பரியமும், அவருடைய மாணத்தைப் பற்றியும், அவருடைய அடக்கத்தைப்பற்றியும் இந்திய சரித்திர ஆசிரியர்களும் மற்ற வர்களும் கூறும் சாட்சியமும் இந்த வாக்குமூலத்தில் காணப் படும் குறிப்புகளோடு நன்கு ஒத்துப்போகின்றன என்பதில் சந்தேக மில்லை.

(2) இந்த கல்லறையைத் தோண்டுவதற்கு 20 வருஷங் களுக்கு முன்பே **மரிஞ்ஞோலி** என்பவர் "அவருடைய (அப் போஸ்தலர்) இரத்தத்தோடு கலந்திருந்த மண்ணையும் எடுத்து அவருடைய சரீரத்தோடு அடக்கம் செய்தார்கள் என்று கூறி யிருக்கிறார். குடத்திலிருந்த மண் இரத்தத்தோடு கலந்த மண்ணாயிருக்கலாமன்றோ?

(3) இந்த கல்லறையைத் தோண்டிப் பார்ப்பதற்கு 300 வருஷங்களுக்கு முன்பே **மார் சாலமோன்** என்ற மேற்றிராணி யார் "இந்தியர்களுடைய அரசன் ஒருவனால் ஈட்டியினால் குத்தப்பட்டு உயிர்விட்டார்," என்றார். கல்லறையில் காணப் பட்ட ஈட்டி முனை இச்சரித்திரக் குறிப்போடு ஒத்துப்போகிற தல்லவா?

1545-வது வருஷம் அர்ச். சவரியார் மைலாப்பூருக்கு வந்து அப்போது பங்குக் குருவாயிருந்த **கஸ்பார் கொயிலியோ** சுவாமி யாரோடு நான்கு மாதங்கள் தங்கியிருந்தார். மலாக்கா, சீனு முதலிய நாடுகளில் சுவிசேஷம் போதிப்பதைப்பற்றி தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள அப்போஸ்தலரான

தோமையாரிடம் யோசனை கேட்கவே வந்திருந்தார். தாம் தங்கியிருந்த அறையிலிருந்து பகல் நேரத்திலும் இரவிலும் கோவிலுக்குச் சென்று தம்முடைய சந்தேக நிவாரணத்துக்காக அர்ச். தோமையாரிடம் தம்மை ஒப்படைத்து செபித்தார்.

அர்ச். தோமையாருடைய கல்லறை அங்கிருந்ததைப்பற்றி எவ்வித சந்தேகமும் தமக்கில்லாதபடியால்தான் அக்கல்லறை யிடம் சென்று செபித்தாரேயன்றி ஏதோ ஒரு கட்டுக்கதையை நம்பி அப்படி செய்துவிடவில்லை. தேவ பக்தியிலும், ஞானத்திலும் சிறந்து விளங்கிய அர்ச். சவரியார் போன்ற ஒருவர் இவ்வளவு உறுதியான நம்பிக்கையோடு இக்கல்லறை யிடம் சென்று வேண்டிக்கொண்டதே அர்ச். தோமையார் மைலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டார் என்பதற்கு ஒரு நல்ல அத்தாட்சியாகுமன்றோ ?

ஆகவே போர்த்துகீசியர் கண்ட இந்தக் கல்லறை உண்மை யாகவே அர்ச். தோமையாருடைய கல்லறை என்பதற்கு எவ்வித சந்தேகமும் இல்லை.

கி.பி. 1606-ம் ஆண்டில் **5-வது பால்** என்ற பாப்பானவர் மைலாப்பூரை ஒரு மேற்றிராசனமாக ஏற்படுத்தி, இங்ஙனம், ஏற்படுத்துவதற்கு, “அவ்விடத்தில் **அர்ச். தோமையாருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்டு இருப்பதுதான் காரணம்**” என்று குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

கி.பி. 1729-வது ஆண்டில் கல்லறை திரும்பவும் திறக்கப் பட்டது. அக்காலத்தில் மைலாப்பூர் மேற்றிராணியாராய் இருந்த, மிக. வண. **ஜோசப் பிஞ்ஜேரோ** ஆண்டவரவர்கள் எழுதிய கடிதத்திலிருந்து இதைப்பற்றிய விவரங்கள் கிடைக் கின்றன.

“திரு யாத்திரையாய் வந்தவர்களுக்கு (பழைய காலத்தி லிருந்து இந்நாள்வரையிலுமுள்ள வழக்கத்தின்படி) கல்லறை யிலிருந்து மண் எடுத்துக் கொடுக்கும்படியாக 1729-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் தேதியன்று அர்ச். தோமையாருடைய பெயரால் வழங்கப்பட்ட கல்லறை திறக்கப்பட்டது. சலவைக் கற்பலகையைத் தோண்டி எடுத்தபின், கல்லில் செதுக்கப்பட்ட

தோமையாருடைய உருவம் ஒன்று கிடைத்தது . . . . . . மேலும் தோண்டியபின் கடைசியாக ஒரு ஆளை அடக்கம் செய் வதற்கு போதிய அளவு இடம் காணப்பட்டது. அதே 29-ம் தேதியன்று மிகத் தெளிவும், பிரகாசமுமான ஒரு வெளிச்சம் காணப்பட்டது."

இதைக் கண்ணால் கண்ட எழு பேர் சாட்சியாக இதைக் குறித்து ஒரு பத்திரம் தயார் செய்து ரோமாபுரிக்கு அனுப்பின தாக, மேற் சொல்லப்பட்ட மைலாப்பூர் மேற்றிராணியார் எழுதி வைத்தார். இதன்பின் அர்ச். அகுஸ்தின் சபையில் சேர்ந்த சந்நியாசிகள் அப்போஸ்தலருடைய கல்லறைக்கு பாது காவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். கல்லறையை ஒட்டி அவர்கள் எழுப்பிய சிறு ஆலயம் மைலாப்பூர் மேற்றிராசனக் கோயிலாக விளங்கினது. அதே கோவில் சிறிது பெரியதாகக் கட்டப்பட்டு **1893**-ம் ஆண்டு வரைக்கும் மேற்றிராசனக் கோவி லாக இருந்தது. அவ்வாண்டில் மைலாப்பூர் மேற்றிராணி யாய் இருந்த, மிக. வண. **ரீட்டா சில்வா** ஆண்டவரவர்கள் பழைய கோவிலை இடித்துவிட்டு தற்போது இருக்கும் அழகிய கோவிலை அமைத்தார்.

1906-ம் வருஷம் மயிலை மேற்றிராசனம் ஏற்பட்ட மூன்றும் நூற்றுண்டின் ஜூபிலிக் கொண்டாட்டத்தின்போது அக்கால மிருந்த மேற்றிராணியாராகிய மிக. வண. **தெயதோனியுஸ் எம்மானுவேல் வியேராடிகாஸ்ற்ரோ** ஆண்டவர் அர்ச். தோமை யார் கல்லறையை இன்னமுமதிகமாக மகிமைப்படுத்த எண்ணி பூமி மட்டத்திற்கு எழடி ஆழமாகக் கல்லறையிருக்குமிடத் தைச் சுற்றிலும், விசாலப்படுத்தி அக்கல்லறையின்மீதே திருப் பலி பூசை செய்வதற்கு எற்றபடி பலவர்ணச் சலவைக் கல்லினுற் செய்த ஒரு பலிபீடமும், மேற் சொல்லிய தளவரிசையையும் அதன் சுற்றுச் சுவர்களையும் அலங்கரிக்கப் பளிங்குபோன்ற சுத்த வெண்மையான இத்தாலிய தேசத்துச் சலவைக் கற்களை வரவழைத்து அழகுபட அமைத்துள்ளார்.

அக்காலத்தில் கல்லறைக்கு எவ்வளவு வணக்கம் காட்டி வந்தார்களென்றுல், மைலாப்பூரைத் தம் ஞான ஆளுகையில் கொண்டிருந்த கொச்சி மேற்றிராணியாண்டவருடைய கட்டளை

யின்படி "கல்லறையின் பீடத்தில் வருஷத்திற்கொருமுறை மட்டுமே திவ்விய பூசை செய்யமுடியும். பூசை நேரத்தில் சீஷப்பிள்ளை வெளியிலிருந்துகொண்டே பூசைக்கு உதவி செய்ய வேண்டியிருந்தது. குருவானவரே அவ்விடத்தைப் பெருக்க வேண்டுமென்று இருந்தது."

6

சின்னமலே

"ஒரு பட்டணத்தில் உங்களேத் துன்புறுத்தினுல் இன்னெரு இடத்திற்கு ஓடிப்போங்கள்" (மத். 10, 23) என்ற நமது ஆண்டவருடைய உபதேசத்தின்படி அப்போஸ்தலர்கள் நடந்து கொண்டார்கள். தங்களே வேத சாட்சிகளாக்கும்படி அவர்கள் தங்களே அநாவசியமாக விரோதிகளுக்குக் கையளிக்கவில்லே. குறித்த நாள்வரும் வரைக்கும் அவர்கள் ஆண்டவருடைய இராச்சியத்துக்காக உழைக்க வேண்டியிருக்க அநாவசியமாகத் தங்களே ஆபத்துக்கு உட்படுத்தவில்லே.

அங்ஙனமே அர்ச். தோமையாரும் நடந்து கொண்டார். மற்ற எல்லா நாடுகளிலும் நடந்ததுபோலவே இங்கும் கிறீஸ்துவின் சுவிசேஷத்திற்கு விரோதிகள் ஏற்பட்டார்கள். ஆகையால் அர்ச். தோமையாருக்கும் விரோதிகள் ஏற்பட, அவர்கள் அவரைப் பிடித்துப் பலமுறை துன்புறுத்தினதாகச் சொல்லப்படுகிறது. இத்தகைய சந்தர்ப்பங்களில் நமது அப்போஸ்தலர், இப்போது சின்னமலே என்று சொல்லப்படும் இடத்தில் இருந்த சிறு காட்டில், இயற்கையாகவே அமைந்திருந்த ஒரு குகையில் தம்மை ஒளித்துத் தப்பித்துக்கொண்டதாகப் பாரம்பரியமாகச் சொல்லப்பட்டுவருகிறது. தற்போது சின்னமலேயிலுள்ள கோவிலோடு சேர்ந்துள்ள குகையே அப்போஸ்தலருடைய அடைக்கலமாயிருந்த குகையாம். அப்போது நாட்டை ஆண்ட மகாதேவனுடைய ஆட்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள இவ்விடம் இச்சிறுமலே உதவினது என்பதைக் குறித்து இந்துக்களிடையிலும் பாரம்பரியமாகச் சொல்லப்பட்டு வருகிறது.

மனிதனுடைய கையினுல் கட்டப்படாமல் இயற்கையாகவே அமைந்த குகை என்று பார்ப்பவர்களுக்கு உடனே புலப்படும். இக்குகை ஏறக்குறைய 16 அடி நீளமும் 15 அடி அகலமும்

7 அடி உயரமும் இருக்கும். ஒரு பக்கத்தில் சிறியதொரு துவார மிருக்கிறது. அது 5 அடி நீளம் 2 அடி அகலம் இருக்கலாம். இதில் நுழைந்துபோவது கஷ்டமே. இக்குகையானது ஆதியில் இருந்தது போலவே இப்போதும் இருக்கிறது. அப்போஸ்தலர் தப்பிப்பதற்காக ஓடிவந்தபொழுது இத்துவாரம் தானகவே திறந்ததென்று சொல்லப்படுகிறது. இவ்வளவு சிறிய துவாரத்தில் எப்படி நுழைந்தார் என்பதும் ஆச்சரிய மாகவே இருக்கிறது. அத்துவாரத்தின் மேற்பக்கம் படிந்திருக்கும் விரல்களின் அடையாளத்தைக் காணும்பொழுது 6 அடிக்கு மேற்பட்ட வாட்டம் சாட்டமான உருவம் ஒன்று மனதில் எழுகிறது. குகையில் எப்போதும் இருட்டாயிருப்பதால் பார்ப்பதற்கு விளக்கு தேவையாயிருக்கும்.

இக்குகையில் சமயா சமயங்களில் திவ்விய பூசை செய்யப் பட்டு வந்ததாக 1559-ம் வருஷத்தில் ஒரு சேசுசபை குருவானவர் எழுதி வைத்தார். இப்போதும் அங்கு பூசை செய்வதற்கு புதிய பீடம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. பீடத்தின் மேல் அர்ச். தோமையாரின் சுரூபம் வைக்கப்பட்டிருக் கிறது.

சின்னமலைக்குத் திரு யாத்திரையாய் வந்தவர்களுடைய சௌகரியத்திற்காக 1551-ம் ஆண்டில் காடுபோல் இருந்த இடத்தைச் சிறிது சமப்படுத்திச் சீர்படுத்த வேண்டியதாயிற்று. போர்த்துகீசியர் இப்போதிருக்கும், பரிசுத்த ஆரோக்கிய தேவ தாயின் கோயிலை குகையோடு சேர்த்துக் கட்டினர்.

கோயிலுக்குச் சற்று பின்புறத்தில் கற்பாறையிற் செதுக்கப் பட்ட சிலுவையொன்றிருக்கின்றது. அது பெரிய மலையிலுள்ள கற்சிலுவையைப் போன்ற சாயலுங் கொண்டுள்ளது. ஆனல் அளவிற் சிறியது. இச்சிலுவையை அர்ச். தோமையாரே கல்லில் வெட்டி, அதனடியில் பீடமொன்று கட்டி அதனடியில் பலி பூசை நிறைவேற்றி, செபம், தியானம் செய்துவந்தாரென்பது பாரம்பரை. அதன்மேல் ஒரு சிறு ஆலயம் அமைக்கப்பட்டது. அதனுள் இக்கற் சிலுவை பீடத்தின்மேல் அமையுமாறு 1559-ம் ஆண்டில் அக்கோவில் கட்டப்பட்டது. இதுதான் **உயிர்த்த ஆண்டவர் கோவில்.** இது பிற்காலத்தில் இடிந்து

கல்லில் செதுக்கப்பட்ட அர்ச். தோமையாருடைய உருவம். மிகப்புராதன மானது. 1729-ம் ஆண்டில் கல்லறையைத் தோண்டியபோது கண்டெடுத்தது.

மேற்கு



கிழக்கு

பழைய அர்ச். தோமையார் கோவில். 1893-ம் ஆண்டில் இடித்து இப்போ திருக்கும் ஆலயம் கட்டப்பட்டது. படத்தில் கிழக்கு மூலையில் காணும் வில் போன்ற கட்டிடத்திற்கடியில்தான் அப்போஸ்தலருடைய கல்லறை இருந்தது இப்போதும் அதே இடத்தில்தான் இருக்கிறது.

அழிந்துபோயிற்று. சிலுவைமட்டும் இன்னும் அப்படியே இருக்கிறது.

பெரியமலை மீதுள்ள கற்சிலுவையானது, தண்ணீரும் இரத்தமும் வியர்க்கும்போது, இதுவும் அதே பிரகாரம் அற்புதங் காட்டியதாக சான்று உள்ளது.

மேலும் வீரமா முனிவர் தாம் சீர்மைக்கெழுதிய கடிதங்களிலும் இவ்வற்புதங்களைப்பற்றி வரைந்துள்ளார்.

நீர் ஊற்று

மேற் சொல்லிய கற்சிலுவையின் அருகே தென்புறத்தில் ஒரு பாறை இருக்கிறது. அதில் சிறு கிணறுபோல் வெடிப்பு ஒன்று உள்ளது. அதன் ஆழம் சுமார் எழடி இருக்கும். இவ்வெடிப்பில் எப்போதும் தண்ணீர் நிற்கின்றது. வெயிற் காலத்தில்மட்டும் தண்ணீர் குறைந்துவிடுகிறது. இந்தச் சுனை அற்புதமாக தோன்றியதெனச் சொல்லப்படுகிறது. அப்போஸ்தலர் ஜனங்களுக்கு மலையின்மீது போதிப்பது வழக்கம். ஒரு நாள் அங்கு அவரது போதகம் கேட்டிருந்தவர்கள் தாகத்தால் தவிப்பதைக் கண்ட அர்ச். தோமையார், தண்ணீர் பக்கத்தி லில்லாததால் மனம் வருந்தி ஆதி காலத்தில் மோஸஸ் செய்த அற்புதத்தை நினைத்து, கடவுள்மேல் நம்பிக்கை வைத்து தமது கரத்திலிருந்த தடியால் பாறையை தட்டியவுடனே பாறை பிளவுபட்டு அதினின்றும் தண்ணீர் சுரந்தது. அன்று தொட்டு, இன்றுவரையும் தண்ணீர் அதில் இருந்துவருகிறது, இவ்வற்புத வரலாற்றினிமித்தமே, யாத்ரீகள் கிறிஸ்துவர்களும், கிறிஸ்துவர் அல்லாதாரும் அச்சுனையிடம் சென்று ஜலம் மொண்டு பக்தியுடன் பருகிவருகிறார்கள். அநேகம்பேர் அதைப் பாத்திரங்களில் நிரப்பி வீட்டிற்குக் கொண்டுபோய் நோயாளிகள்பருகச் செய்வதும் வழக்கமாயிருக்கிறது. 1716-ம் ஆண்டில் **டாஷர்ட்** சுவாமியார் எழுதிய கடிதத்தில் இதன் செய்திகள் காண்கின்றன. பதிதஸ்திரீகள் சிலர் இதில் மண்ணைவாரிப் போட்டதாகவும், அப்போது தண்ணீர் உடனே குறைந்து போனதாகவும் தாம் ஜனங்களிடம் கேட்டதை அவர் எழுதியிருக்கிறார்.

இச்சுனைக்கு மேற்கே ஒரு பெரும் பாறையின்மேல் சிகரம் போன்ற சின்னமொன்றிருப்பதை பார்க்கலாம். அந்த பாறையின் உச்சியானது அகன்று பெரிய மேசை போலிருக்கின்றது. அதன்மேல் நின்றுதான் அப்போஸ்தலர் போதித்தார். அவ்விசேஷத்தைக் குறிப்பிக்கவே மேற்சொன்ன சிகரம் கட்டப்பட்டதென்று சொல்லப்படுகிறது.

சின்னமலை ஒட்டி ஓடும் ஆறு 17-ம் நூற்றுண்டில்தான் ஏற்பட்டது. ஏதோ ஒரு பெரிய குளமோ ஏரியோ உடைந்து உண்டான வெள்ளத்தால் அது ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது.

7

பெரியமலை

இது ஏறக்குறைய 300 அடி உயர்ந்தது. சென்னை செண்ட் ஜார்ஜ் கோட்டைக்கு தென்மேற்காக எட்டு மைல் தூரத்தில் உள்ளது. (அதே திக்கில் மைலாப்பூரிலிருந்து ஏறக்குறைய எழு மைல் தூரம்) அது செங்கற்பட்டு சிவில் ஜில்லாவுக்கு உட்பட்டது. மாட்சிமை தங்கிய மயிலை மேற்றிராணியாரின் ஆளுகைக் குட்பட்டது. இந்த திவ்விய ஸ்தலமானது சாதாரணமாக சென்னை வாசிகளாலும் அதைச் சுற்றியிருப்பவர்களாலும் **பெரியமலை** என்று வழங்கி வருகிறது.

" **பிருங்கி** என்ற பெயர் கொண்ட ஒரு ரிஷி அக்காலத்தில் காடு அடர்ந்த இம்மலையின்மேல் வசித்துவந்ததாகவும் தோமை என்னும் கிறீஸ்துவ ரிஷி இங்கு வந்தபோது, அவர் அம்மலையை விட்டுப் போய்விட்டதாகவும் அதனால் அம்மலைக்கு " பிருங்கிமலை " அல்லது பரங்கிமலை என்று பேர் வழங்கி வருவதாகவும் ஜனங்களிடையில் ஒரு கதை இருக்கிறது.

பதினோராம் நூற்றாண்டில்போர்ச்சுகீசியரும் அர்மேனியக் கிறீஸ்துவர்களும் இங்குக் குடியேறின காலத்திலிருந்து பெரிய மலைக்குப் பல கிறீஸ்துவ பெயர்கள் வழங்கி வந்தன. அவை **" பரிசுத்தமலை, நமது ஆண்டவரின் மலை, நமது தேவதாயின் மலை "** முதலியன. பின்னால் குடியேறிய அநேக ஐரோப்பியர்கள், அம்மலையையும் அதன் அடிவாரத்திலுள்ள பட்டணத்தையும் தற்காலம் வழங்கிவரும், **செண்ட் தாமஸ் மவுண்ட்** என்ற ஆங்கிலப் பெயரைத் தந்தார்கள். ஐரோப்பியரைப் பரங்கிக்காரர் என அழைப்பது வழக்கமாகையால் பரங்கிமலை என்று பெயர் வந்திருக்கலாம்.

மலையின் உச்சியிலுள்ள ஆலயத்துக்கு ஏறிச்செல்ல இப்போது **135** கருங்கல் படிகள் இருக்கின்றன. அவற்றின் இரு பக்கங்களிலும் கைப்பிடி சுவர்போல் கனத்த சுவர்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இப்படிகளைக் கொண்ட பாதையும் சின்ன மலைக்கு அருகிலுள்ள **மார்மலாங்** என்று பெயர் கொண்ட பாலமும் **1726**-ம் ஆண்டில் **பீடர் அஸ்கன்** என்னும் பெயர் கொண்ட கத்தோலிக்கு அர்மேனியர் ஒருவரால், பரிசுத்த மலைக்குச் செல்லும் யாத்ரீகர்களின் சௌகரியத்துக்காக கட்டப்பட்டன. மேலும் அவர் ஒரு பெரும் பணத்தொகையை, ஆங்கிலப் பொக்கிஷத்தில் இருப்பாக வைத்து, அதிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு, வருடந்தோறும் அப்பாதையையும் சுவர்களையும் பழுது பார்க்கும்படி ஏற்பாடு செய்தார். பண்டைக்காலத்தில் யாத்திரிகள் மலையின் அடிவாரத்திலிருந்து மேலிருக்கும் ஆலயத்திற்குச் செல்லும் முழு தூரத்தையும் முழந்தாளிலிருந்து கொண்டே ஏறுவதைக் காண்பது சாதாரண காட்சியாக இருக்கும்.

கோவிலுக்கு வடக்கிலுள்ள வில்வளைவான ஒரு சிறு கட்டிடம் இப்போது கோவில் கிடங்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. அது ஒரு காலத்தில் வெடிமருந்து கிடங்காகவும் இருந்து வந்தது. இப்பழைய கட்டிடத்தினருகில் நான்கு பெருங்கற்கள் நாட்டியிருப்பதையும் அதன் மத்தியில் பெருந்துவாரமொன்றிருப்பதையும் காணும்போது முன்னே அது கொடிமரம் இருந்த இடமாயிருந்திருக்க வேண்டும் என்று புலப்படுகின்றது. போர்ச்சுக்கீசியருக்கு முன்னே அவ்விடத்தில், கலங்கரை விளக்கமும் அதனருகே ஒரு சந்நியாச மடமும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. பின் சொன்ன சந்நியாச மடமானது வில்வளைவான கிடங்குக்கும் தற்போது இருந்துவரும் மடத்திற்கும் மத்தியில் கட்டப்பட்டிருந்ததாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

இம்மலையில்தான் அர்ச். தோமையார் அடிக்கடி மறைந்து செபத்தியானம் செய்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. அங்கேயே வாசம் செய்தார் என்றும் சொல்லுகிறார்கள்.

தாமே செதுக்கிய கற்சிலுவையின் முன்னிலையில் செபத்தியானத்தில் ஆழ்ந்திருந்தபோது, ராஜா மகாதேவனுடைய வேலையாள், அப்போஸ்தலருக்குப் பின்னாக மறைவாய் வந்து அவரைக் குத்திக் கொன்றுவிட்டான் என்பது பாரம்பரை. குத்தப்பட்டதும், அர்ச். தோமையார் தம்முன்னிருந்த சிலுவையை அரவணைத்தாற்போல் உயிர்விட்டார். இங்ஙனம் தமது நெஞ்சம் திறக்கப்பட்டு ஆண்டவருக்காக பலியானார்.

அப்போஸ்தலர் கொல்லப்பட்ட வரலாறு பின்வருமாறு சற்று விரிவாகவும் சொல்லப்படுவதுண்டு :—

மகாதேவ இராஜனால் அர்ச். தோமையார் சிறைப்பட்ட சில காலத்துக்குப் பிறகு, அரசன் அவரைக் கொல்லும்படி கட்டளையிட்டான். அக்கட்டளையின்மேல் அவரைக் கொல்லக் கூட்டிச் சென்றனர். அர்ச். தோமையாருடன் அவரின் சீஷர்களாகிய **விஜயனும், பவுலும்** சென்றார்கள். போகும் வழியில் சின்னமலையில் அவர் வழக்கமாக செபித்துவந்த இடங்களுக்கெல்லாம் சென்று செபித்துப் பின் பெரிய மலைக்கு வந்து சேர்ந்தார்.

பின்பு தோமையார் விஜயனையும், பவுலையும் தனிமையில் அழைத்து அங்கு சிலுவை செதுக்கப்பட்ட கல் முன் கடைசி முறையாகத் திவ்விய பலிபூசை நிறைவேற்றினார். பின்பு பவுலை மேற்றிராணியாராகவும், விஜயனை டீக்கனாகவும் அபிஷேகம் பண்ணினார். பின்பு அவர் சூரிய அஸ்தமனம்வரை செபம் செய்துவிட்டு சேவகர்களை நோக்கி, "உங்கள் கட்டளையை நிறைவேற்றுங்கள்," என்று சொல்லிவிட்டு சிலுவையின் முன் முழந்தாட்படியிட்டு தன் உயிரைக் கர்த்தருக்குப் பரித்தியாகம் செய்து, செபித்த வண்ணம் இருந்தார். அப்பொழுது சேவகர் அவரை ஈட்டியால் குத்தினார்கள். அவரது சரீரம் சிலுவைக்கல்லின்மீது விழ அக்கல் அவருடைய இரத்தத்தால் தோய்ந்தது. சேவகர்கள் அவ்விடம்விட்டுப் போனபின் டீக்கன் விஜயனும், மேற்றிராணியார் பவுலும் அவரண்டைப்போய் அவர் குற்றுயிராயிருப்பதைக் கண்டனர். அர்ச். தோமையார் முன்னொருகால் கைவிட்டுப் பார்த்த சேசுவின் திருவிலாகாயம்

பட்ட இடத்திலேயே ஓர் ஈட்டி பாய்ந்திருப்பதைக் கண்டு அதை எடுத்தனர். இரத்தம் பீரிட்டுப் பாய்ந்தது. உடனே விஜயன் அவரை தமது வீட்டிற்குக் கொண்டுபோய் குணப்படுத்தலா மென்று, பவுல் மேற்றிராணியாரைக் கேட்டார். அதை அறிந்த அப்போஸ்தலர் மரண அவஸ்தையில் இருந்தாலும் தமது திருவாய் மலர்ந்து "மருந்தால் பயனில்லை, கிறீஸ்து நாதர் என்னை அழைக்கிறுர்" என்றுர்.

இத்துயரச் செய்தியைக் கேட்ட திரளான சனங்கள் பெரிய மலையில் அவரைச் சந்தித்தனர். அவர் அவர்களை விசுவாசத்தில் திடமாயிருக்க புத்திமதி கூறி ஆசீர்வதித்த பின்பு இறைவன் திருப்பாதம் சேர்ந்தார்.

பின்பு அங்கு கூடியிருந்த விசுவாசிகளின் வேண்டுகோளின் பேரில் அவருடைய சடலம் மைலாப்பூருக்குக் கொண்டுவரப் பட்டது. அவருடைய இரத்தம் படிந்த மண்ணையும் ஓர் பாத்திரத்தில் கொண்டுவந்தனர். மைலாப்பூரில், கோவிலில் செப ஆராதனை நடந்தபின் அவருடைய சடலத்தையும் பெரிய மலையிலிருந்து கொண்டுவந்த இரத்தம் வடிந்த மண்ணை வைத்திருந்த பாத்திரத்தையும் அடக்கம் செய்தனர். இது நிறைவேறியது கி.பி. 68-ம் ஆண்டு எனப் பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது.

அப்போஸ்தலர் கொலையுண்டதும் அவரால் எற்கனவே கிராங்கனூரில் மேற்றிராணியாராக நியமிக்கப்பட்ட பீட்டர் என்பவர் ஓர் நாள் திவ்விய பலிபூசை நிறைவேற்றிக் கொண்டிருக்கையில் தேவதூதன் அவருக்குத் தோன்றி "சேசுவின் அப்போஸ்தலராகிய அர்ச். தோமையார் மோட்சம் போய்விட்டார்" என்று அறிவித்தார்.

பலிபூசை முடிந்த பின்பு, அநேக கிறீஸ்துவர்கள் பின் தொடர, மைலாப்பூர் வந்து சேர்ந்தார். அப்போஸ்தலர் கல்லறையைச் சுற்றி எல்லோரும் மிகுந்த துயரத்தோடும் உருக்கத்தோடும் செபித்தார்கள்.

இதுபோலவே பத்து நாட்கள் ஜனங்கள் மாறி மாறிக் கும்பல் கும்பலாக வந்து செபித்துக்கொண்டிருந்தார்கள். பத்தாம் நாள் இரவில் ஒருவித பிரகாசம் தோன்ற அர்ச். தோமையார் ஜனங்கள் மத்தியில் தோன்றி அவர்களை நோக்கி "மக்களே! சேசுவை என்றும் நேசியுங்கள். அவர்பால் உள்ள விசுவாசத்தைக் தளரவிடாதீர்கள் மேலும் **என் மரணத்தை நினைவுகூருவோரும் என் கல்லறையை தரிசிப்பவரும் விசேஷ வரங்களை அடைவார்கள்**" என்று கூறி எல்லோரையும் ஆசிர்வதித்ததாக பழைய சரித்திரம் கூறுகிறது.

8

இரத்தம் கசியும் சிலுவை

போர்த்துகீசியர் பெரிய மலைக்கு வந்து, அதன் பக்கங்களில் குடியேறியபொழுது இம்மலையின்மீது கட்டடம் ஒன்றும் தென்படவில்லை. முன்பு எக்காலத்திலேயோ இருந்த ஒரு கட்டடத்தின் இடிந்த சுவர்களின் ஒரு சிறுபாகம் மட்டுமே காணப்பட்டது. முந்திய காலத்தில் அது ஒரு சிறு கோவிலாக இருந்திருக்கலாம். கி.பி. **1523**-ம் ஆண்டில் போர்த்துகீசியர் தேவதாயின்பேரால் சின்ன செபக்கூடத்தைக் கட்டினார்கள். அது எவ்வளவு சிறிதாய் இருந்ததென்றால் 8—10 பேரைக்கூட கொள்வதற்கு முடியாமல் இருந்தது.

நாளாக ஆக ஜனங்கள் திரு யாத்திரையாய் மலையை நாடி வரவே பெரியதொரு கோவிலைக் கட்டவேண்டுமென்று பெரிய மலை வாசிகள் நினைத்தார்கள். இதற்கென்று பணம் தண்டி **1547**-ம் ஆண்டில் மார்ச் மாதத்தில் வேலை தொடங்க நினைத்தார்கள். அப்போது பங்குக் குருவாயிருந்த **கஸ்பார் கொயிலியோ** சுவாமியாரும், கப்பல் தலைவன் **காப்ரியேல் தெ அத்தாய் தெ** என்பவரும் இன்னும் பத்து பன்னிரண்டு பெரிய மனிதர்களும் ஒன்றாக மலைக்குப்போய் பழைய சிறு கோவிலைச் சுற்றியே புதிய கோவிலைக் கட்டலாமென்றெண்ணி அளவெடுத்து, அஸ்திவாரம் தோண்டத் தொடங்கினார்கள். சற்றுத் தோண்டியதும் வேறு அஸ்திவாரக் கட்டிடம் ஒன்று காணப்பட்டது. முன்பு அங்கு பழையதொரு கோவில் இருந்திருக்கவேண்டுமென்று யூகித்துக் கொண்டார்கள். இன்னும் சிறிது ஆழமாய்த் தோண்டியபின் யந்திரக்கல்லைப்போன்ற ஒரு பெரிய கல் கிடைத்தது. ஒரு சாதாரணமான கல் என்று நினைத்து கவனிக்காமல் இருந்துவிட்டார்கள். ஆனால் திடீரென்று எதோ ஒரு எவுதலால் தூண்டப்

மலையாள நாட்டில் காணும் சிலுவைகள். பல்வி-பாஷையில் எழுத்துக்கள் கொண்டன.

கோட்டாயத்தில் (மலையாளம்) வலிய பள்ளிக்கோவிலில் இடப்பக்கமுள்ள பீடத்தில் காணும் திருச்சிலுவை.



அதே வலிய பள்ளிக்கோவிலில் வலப்பக்கமுள்ள பீடத்தில் காணும் சிலுவை.

மலையாளத்தில், கடமட்டம் என்ற ஊரில் யாக்கோபித்தர் கோவிலில் காணும் திருச்சிலுவை.



அர்ச். தோமையார் கல்லறை 1523.ம் ஆண்டில் போர்த்துகீசியரால் திறக்கப்பட்டபோது 15 அடிக்கு மணலும் கெட்டிப்பூமியும் மாறிமாறிக் காணப்பட்டது குறிப்பிடத்தக்கது. அடியில் இரத்தம் கலந்த மண்கொண்ட குடமும், ஈட்டிமுனையும், சில எலும்புத் துண்டுகளும் காண்க.

அர்ச். தோமையார் மலைக்கோவில் பெரிய பீடம். இந்தப் பீடம் இருக்கும் இடத்தில்தான் அர்ச். தோமையார் கொல்லப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது.



இதுதான் பலமுறை அற்புதமாய் இரத்தம் கசிந்த திருச் சிலுவை. இது மலைக்கோவில் பெரிய பீடத்தில் ஸ்தாபிக் கப்பட்டுள்ளது. இதை அர்ச். தோமையாரே கல்லில் செதுக்கினதாகவும், அதன் முன் முழந்தாளிட்டு செபிக் கும்போது ஈட்டியால் குத்தப்பட்டதாகவும் அப்போது அவ ருடைய இரத்தம் இச்சிலுவை மேல் தெறித்ததாகவும் சொல்லப்படுகிறது.

பட்டவர்களாய்க் கல்லைத் திருப்பிப் போட்டார்கள். உடனே அதன் மேற்புறத்தில் செதுக்கப்பட்டிருந்த ஒரு அழகான சிலுவை கண்களுக்குத் தென்பட்டது. அதைச்சுற்றி எதோ ஒரு பாஷையில் எழுத்துக்களும் காணப்பட்டன. சிலுவையின் ஒரு பக்கத்தில் இரத்தக்கறை ஒன்று காணப்பட்டது. அப் போதே வடிந்த இரத்தம்போலவே அது தோன்றிற்று. கோவிலைக் கட்டியபின் இப்பரிசுத்தக்கல்லை பீடத்தின்மேல் ஸ்தாபித்தார்கள். கல்லின்மேல் காணப்பட்ட இரத்தக் கறையைத் துடைத்தாலும் போகாமல் அப்படியே இருந்தது. இக்கல்லின் அடியில் இரத்தத்தில் தோய்ந்த மண்ணும் தென் பட்டது, மண்ணோடு கலந்திருந்தும் அப்போதே வடிந்த இரத்தம் போலத் தெரிந்தது. அதில் பெரும் பகுதி கல்லோடே ஒட்டிக்கொண்டிருந்தது. இம்மண்ணையெடுத்து ஒரு பாத் திரத்தில் வைத்து பெரிய மலையில் எங்கேயோ ஒரு இடத்தில் ஒளித்து வைத்தார்கள். இதைப்பற்றிய ஒரு கல்வெட்டு பின் வருமாறு வெட்டப்பட்டிருந்தது :—

"இச்சிலுவை யடையாளத்தோடு மண் நிறைந்த ஒரு பாத் திரமும் இங்கு **1596**-ம் ஆண்டில்" அகப்பட்டது.

மைலாப்பூரில் போர்த்துகீசியர் அர்ச். தோமையாருடைய கல்லறையைத் தோண்டியபொழுது அடியில் காணப்பட்ட குட மும் இதுவும் ஒன்றுதானோ என நிச்சயமாய் சொல்வதற்கில்லை. இக்கல்லின்மீது பலமுறை அற்புதமான சம்பவங்கள் நிறை வேறின.

1558-ம் வருஷம் டிசம்பர் மாதம் **18**-ம் தேதி கோவில் திருநாளாகிய தேவதாய் திருக்குழந்தையின் பிறப்பை எதிர் பார்த்த நாளன்று, பூசை நேரத்தில் சுவிசேஷம் பாடும் பொழுது இக்கற் சிலுவையானது திடீரென்று கறுப்பாய் மாறத் தொடங்கிற்று. அதிலிருந்து தண்ணீரும் வடிய ஆரம் பித்தது. துணி அல்லது ஜெபமாலை அதில் தோய்க்கக்கூடிய வண்ணம் அவ்வளவு தண்ணீர் கசிந்தது. விரும்பியவர்கள் அப்படியே தங்களுடைய கைத்துண்டுகளையும் ஜெபமாலை களையும் தோய்த்துக் கொண்டார்கள். திவ்விய பூசை நிறை வேற்றிய **கஸ்பார் கொய்யில்லியோ** சுவாமியார் பூசை முடிந்த

தும், பரிசுத்தப்பாத்திரச் சிறு துணியை கசிந்த அத்தண்ணீரில் தோய்த்து பாத்திரத்தில் வைத்தார். அடுத்த நாள் பார்த்த பொழுது இரத்தத்தில் தோய்க்கப்பட்ட துணிபோலக் காணப் பட்டது. அதை எடுத்து சனங்களுக்குக் காட்டினுர். இப்புதுமை நாலு மணி நேரம் நிகழ்ந்தது. அதன்பின் கல்லானது வெள்ளையாகவும் பிரகாசமாகவும் காணப்பட்டது. பார்த்தவர் கள் சந்தோஷப்பட்டார்கள். கடைசியாக தன்னுடைய சுய நிறத்தை அடைந்தது. அதிலிருந்து ஒவ்வொரு வருஷமும் ஏறக்குறைய, அதே திருநாளன்று பூசையில் சுவிசேஷம் வாசிக்கத் தொடங்கும்போது, அதே புதுமை நடந்து வந்து கொண்டிருந்தது. அங்ஙனம் கசிந்து விழுந்த தண்ணீரை சேர்த்து ஒரு நல்ல பாத்திரத்தில் பத்திரப்படுத்தி வியாதி யஸ்தருக்கு மருந்துபோல் கொடுக்கும்படி விசாரணைக்கு வந்த கொச்சி மேற்றிராணி ஆண்டவர் கட்டளையிட்டதாக தெரியவரு கிறது.

பல மதத்தாரும் இப்புதுமையைக் காண்பதற்கு இங்கு வரு வதுண்டு. இவ்விஷயத்தைப் பற்றி மேற்கூறிய கொச்சி மேற் றிராணி ஆண்டவர் ஒரு செய்தியும் அனுப்பினுர்.

1689–1695 ஆண்டுகளில் அதே திருநாளன்று தாமே கண்ணுரக்கண்ட இப்புதுமையைக் குறித்து **சில்வஸ்டர் டிசோஸா** என்ற சேசு சபை குருவானவர் சில விஷயங்களை எழுதினுர். “கோவிலில் ஜனங்கள் நிரம்பி இருந்தனர். பிரசங்கம் நடக்கும் வேளையில்ஜனங்கள் எல்லோரும் திடீரென்று “புதுமை! புதுமை ! என்று கூக்குரலிட்டார்கள். பிரசங்கம் செய்த குருவானவர் திரும்பிப் பார்க்கவே மேற்கூறிய புதுமை நடந்து கொண்டிருந்தது. அநேக புரோட்டஸ்டாண்டார்களும் அவிசு வாசிகளும், நாஸ்திகர்களும் இதைக்கண்டு ஆச்சரியப்பட்டு உண் மையாகவே புதுமை என்று ஒத்துக் கொண்டார்கள். அவர் களில் சிலர் இதில் ஏதாவது சூழ்ச்சியிருக்குமோவென்று சந் தேகப்பட்டு கோவில் கூரை மேலேறி எல்லாவற்றையும் வெகு நுணுக்கமாக பரிசோதித்தார்கள். ஆனுல் எவ்வித சூழ்ச்சியும் காணவில்லை, ஆதலால் இது கடவுளால் ஆன புதுமை என்று ஒத்துக்கொண்டார்கள்.

இப்புதுமையானது எப்போதும் டிசம்பர் மாதம் 18-ம் தேதி மட்டுமன்று மற்ற நாட்களிலும் சமயாசமயங்களில் நடந்த துண்டு. உதாரணமாக 1581-ம் வருஷம் ஆகமனகாலத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமை கூட நடந்தது. பல முறைகளில் அதிகாலையில் கோவில் திறப்பதற்கு முன்பே நடந்ததுண்டு.

இங்ஙனம் பெரிய மலையில் புதுமை நடந்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு முறை சன்தோமில் சேசு சபை குரு மடத்தின் தலைவர், **பேரேரா** சுவாமியார் **சில்வெஸ்டர் டிசூசா** என்ற சுவாமியாரைச் சின்ன மலைக்கு அனுப்பி அங்கு எதாவது நடந்ததா என்று பார்த்துவரச் சொன்னார். அவர் போய்ப் பார்த்தபோது அங்கும் நாட்டப்பட்டிருந்த கற்சிலுவையில் அதே புதுமை நடந்ததைக் கண்டார்.

1574-ம் ஆண்டிலிருந்து இப்புதுமைகள் நடக்கவில்லை. மலையாளத்திலுள்ள சிலுவைகளிலும் இதுபோன்ற புதுமை ஒரு நாளும் நடந்ததில்லை. அங்குள்ள சிலுவைகளும் மற்ற இடங்களிலுள்ள அது போன்ற சிலுவைகளும் பெரிய மலையிலுள்ள கற்சிலுவையைப் பார்த்து அதுபோல் செதுக்கப்பட்டவையென்றும் பெரிய மலையிலுள்ள இது அர்ச். தோமையாராலேயே செதுக்கப் பட்டது என்றும் சொல்லப்படுகிறது.

இச்சம்பவங்களைப் பற்றிக் குறிப்புகள் **தாசார்** சுவாமியார் எழுதிய கடிதங்களிலிருந்து நமக்குத் தெரிகின்றன.

சிலுவையை சுற்றியிருக்கும் எழுத்துக்களின் அர்த்தம்

எழுத்துக்கள் **பல்வி** பாஷை எழுத்துக்களென பண்டிதர்களெல்லோரும் கூறுகிறார்கள். வெகு காலமாக அவற்றின் அர்த்தம் புரியாமலே இருந்தது.

1561-ம் ஆண்டில் போர்ச்சுகீசியர் விஜயநகர இராச்சியத்திலிருந்து பேர்போன பண்டிதரொருவரை வரவழைத்து, இதற்கு அர்த்தம் சொல்லும்படி கேட்டுக் கொண்டார்கள். ஒவ்வொரு எழுத்தும் ஒரு வாக்கியத்துக்கு சமம் என்று அவர் அபிப்பிராயப்பட்டு பின் வருமாறு அர்த்தம் கூறினார்.

“ **சகமோ** சட்டத்தின் காலத்தில் தோமாஸ் என்ற கடவுளுடைய மனிதன் இந்நாட்டு மக்களைத் தெய்வ ஞானத்திற்கு அழைக்கும்படி இத்தேசத்திற்கு தேவ குமாரனால் அனுப்பப்பட்டார். அவர் ஒரு கோவிலைக் கட்டி புதுமைகள் செய்தார். கடைசியாகச் சிலுவையின்முன் முழங்காலிட்டு செபித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு பிராமணனால் ஈட்டியால் குத்தப்பட்டார். அவருடைய நித்திய ஞாபகமாக, அச்சிலுவையானது, அர்ச்சிய சிஷ்டவருடைய இரத்தத்தால் தோய்க்கப்பட்டது.”

இதே அர்த்தம் இன்னொரு பண்டிதரும் கூறியதாக சொல்லப்படுகிறது.

ஆனால் பிற்காலத்து மொழிவல்லுநர் இதற்கு வேறு அர்த்தம் கூறியிருக்கிறார்.

(1) “தண்டனையாகச் சிலுவையினால் மெய்யான கிறீஸ்துவும் உன்னத கடவுளும், என்றைக்கும் பரிசுத்த வழிகாட்டியுமானவருடைய பாடுகள்”. இதனுடைய கருத்து நன்றாகப் புலப்படவில்லை. இங்ஙனம் அர்த்தம் தந்தது **பர்னல்** என்ற ஐரோப்பிய மொழிவல்லுநர்.

(2) “மெசியாவின்மீதும் (கிறீஸ்துவின்) உன்னத கடவுள் மீதும் இஸ்பிரீத்து சாந்துவின்மீதும் விசுவாசம் வைப்பவன் சிலுவையின் துன்பத்தை அனுபவித்தவருடைய வரப்பிரசாதத்திலிருக்கிறான்,” என்பது **டாக்டர் மார்ட்டின் ஆக்** என்பவருடைய மொழி பெயர்ப்பு.

டாக்டர் வெஸ்ட் என்பவர் பின்வரும் இரு மொழி பெயர்ப்புகளை தந்தார்.

(1) பாவ மன்னிப்பளிப்பவரும் பாவத்தினின்று நிலை நிறுத்துபவருமான உண்மை மெசியாவை (கிறீஸ்துவை) துன்பத்திலிருந்து விடுவித்தது எது? என்றால், சிலுவையில் அறையப்பட்டதும் அதனால் விளைந்த அவமானமுமே.

(2) பாவ மன்னிப்பளிப்பவரும் பாவத்தினின்று நிலை நிறுத்துபவருமான அதே மெஸியாவினுடைய பாடுகள் யாரை இரட்சித்தனவோ அவன் விண்ணப்பிக்கிறான். அதன் ஆதி காரணம் இவருடைய துன்பமேயாம்.

1908-ம் வருஷத்தில் வெவ்வேறு நாட்டிலிருந்த இருவர் இதற்கு ஒரே அர்த்தம் சொன்னது வெகு ஆச்சரியமாய் இருக்கின்றது. அதாவது "சிறுமை (துன்பத்தின்) வழியாக மெசியா உலகத்திற்கு இரட்சண்யம் கொண்டுவந்தார்."

1929-ம் வருஷம் **வின்க்வர்த்** என்ற பேராசிரியர் பின்வருமாறு அர்த்தம் சொன்னார் :—

"என் ஆண்டவராகிய சேசு கிறீஸ்துவே **சாரார்பக்த்** என்பவருடைய மகனும் இதைச் செதுக்கிய சீரிய நாட்டவனுமான **ஆப்ராஸ்** என்பவன்மீது இரக்கமாயிரும்.

இக்கல்வெட்டு ஏறக்குறைய கி.பி. 5-ம் நூற்றாண்டுக்கு பின் செய்யப்பட்டது என்று சொல்லலாம்.

೧

பீடத்திலுள்ள தேவதாயின் திருப்படம்

பெரிய மலையிலுள்ள கோவிலின் திருப்பீடத்தில் சேசு குழந்தையை ஏந்தியவண்ணம் பலகையில் வரையப்பட்ட தேவதாயின் படம் ஒன்று ஸ்தாபிக்கப் பட்டிருக்கிறது. இப்படம் அர்ச். லூக்காஸ் சுவிசேஷகரால் எழுதப்பட்ட எழு படங்களில் ஒன்று என்றும், அர்ச். தோமையார் அதை இந்தியாவுக்குக் கொண்டு வந்தாரென்றும் சொல்லப்படுகிறது. மேற் கூறப்பட்ட கற்சிலுவை அகப்பட்ட இடத்திலேயே இப்படமும் அகப்பட்டது. தரையில் புதைந்து கிடந்தாலும், அதிகமாகக் கெட்டுப்போகா மல் ஏறக்குறைய புதியதாய் வரையப்பட்ட படம்போலவே இருந்தது ஆச்சரியமாயிருக்கிறது.

இப்படத்தைச் சிலர் **அர்ச். தோமையாருடைய உத்தரியம்** என்று அழைக்கிருர்கள். விசேஷமாய் மலையாளத்திலிருந்து வரும் திரு யாத்திரிகர்கள், "அர்ச். தோமையாருடைய உத்த ரியம் எங்கே" என்று சில சமயம் கேட்பதுண்டு. அர்ச். தோமையார் (சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் நேரத்தில்) தம் முடைய கழுத்தில் ஒருவேளை இதை அணிந்துகொண்டு இருந் தாரோ என்னவோ தெரியவில்லை.

1726-ம் வருஷம் **தெசிதேரி** என்ற சேசு சபைக் குருவான வர், கிறீஸ்துவர்கள் மட்டுமன்று விக்ரக ஆராதனை செய்பவர் கள்கூட இப்படத்திற்கு விசேஷ வணக்கம் செய்கிருர்களென்று எழுதிவைத்தார்.

இப்படம் தரையில் புதைந்து கிடந்தது என்று மேற் சொல் லப்பட்டது. இவ்வளவு பரிசுத்தமான ஒரு படம் மண்ணில் புதைக்கப்பட்டதன் காரணம் என்னவென்று சரித்திரம் நமக்கு அறிவிக்கிறது.

16-வது நூற்றுண்டில் சுற்றியிருந்த இந்து அரசர்கள் ஒருவரோடொருவர் போர்புரிந்த காலத்தில் ஏதாவது பொக்கிஷம் கிடைக்குமென்ற கருத்தோடு கோவில்கள் முதலான இடங்களைத் தாக்கி அழித்துவிட்டார்கள். அச்சமயத்தில் கிறீஸ்துவர்கள் இத்திருப் படத்தை பத்திரமாக பாது காக்கவேண்டுமென்று யாருக்கும் தெரியாமல் மண்ணில் புதைத்து வைத்தார்கள். வெகுகாலம் மண்ணில் புதைந்து கிடந்ததால் படம் சிறிது பழுதுபட்டதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதைத் தோண்டும்போது மண்வெட்டி படத்தின்மேல் பட்டதாலும் படத்தில் சிறிது பழுது ஏற்பட்டது. எனினும் அந்நாளிலிருந்து படம் பழுது பார்க்கப்படாமல் அப்படியே யிருக்கிறது. அதைத் திருத்திப் புதுவர்ணம் தீட்டவேண்டுமென்று பல முறை முயற்சி செய்யப்பட்டது.

பிற்காலத்தில் மைலாப்பூர் மேற்றிராணி ஆண்டவர் ஒருவர் கை தேர்ந்த ஒரு ஆளை நியமித்து படத்தை பழுது பார்க்கச் சொன்னுர். அவனே இப்படத்தைவிட அழகான ஒன்றை எழுத போவதாக நினைத்து வேலை ஆரம்பிக்கும் நேரத்தில் திடீரென்று அவன் குருடனுகிவிட்டான். சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் பின்வருமாறு :—

இப்போது மலை மேலிருக்கும் கோவிலைப் பார்க்கவந்த யாத்திரிகர்களுக்கு கன்னியர் கோவிலைக் காண்பிக்கும்பொழுது வயதான ஒரு ஸ்திரீ சொன்னதாவது :—

“அம்மா! இப்படத்தைப்பற்றி நான் என் கண்ணுல் கண்ட ஒரு விஷயத்தை உங்களுக்குச் சொல்லுகிறேன். இதைப் பற்றி நீங்கள் எல்லோருக்கும் சொல்லலாம்.

“நான் சிறுமியாய் இருந்தபோது என் தகப்பனுர் இங்கே உத்தியோகம் பார்த்துவந்தார். இப்படம் பழுதுபட்டிருக்கிறதே, அதைத் திருத்தி எழுதினுல் நலமாயிருக்குமே என்று என் தகப்பனுரும் வேறு சிலரும் நினைத்து, மேற்றிராணியாரிடம் உத்தரவு கேட்டு தகுந்த ஆளையழைத்து, வேலை ஆரம்பமாயிற்று, நான் அருகில் இருந்தேன். வர்ணத்தை எடுத்து தீட்ட ஆரம்பிக்கும்போது, வர்ணமானது சிறு உருண்டைகளாக

மாறிப் பாத ரசத்தைப்போல் வழிந்துவிட்டன. பலமுறை பிரயாசப்பட்டும் அதேமாதிரி நடந்ததால் பிரயோசனமில்லையென்று முயற்சி கைவிடப்பட்டது."

ஆகவே இதன் பிறகு படத்தை யாருமே தொடவில்லை. சற்று தூரத்திலிருந்து பார்க்கும்போது சற்றும் பழுதுபடாத படத்தைப் போலவே காணப்படுகிறது.

இப்படத்தைக் குறித்தும், அர்ச். தோமையாருடைய திருப் பண்டங்களை குறித்தும் சில சரித்திர குறிப்புகள் ஈண்டு தருகிறோம்.

அக்காலத்தில் மைலாப்பூர் கிறீஸ்துவர்கள்மீது ஞான அதிகாரம் செலுத்திவந்த **டோம் வ்ரே ஆந்த்ரே** என்ற பெயர் கொண்ட கொச்சி மேற்றிராணி ஆண்டவர், எழுதிவைத்த குறிப்புகளிலிருந்து நாம் அறிவதாவது :—

"கி.பி. 1589-ம் ஆண்டு ஜூலை மாதத்திலும்.

கி.பி. 1591-ம் ஆண்டு ஜூன் மாதத்திலும்.

1596-ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலும்,

1600-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திலுமாக நான்கு முறை "சான்தோமே" என்று அழைக்கப்படும் பட்டணத்திற்கு நாம் வந்தோம். இங்கு வந்த ஒவ்வொரு முறையும் அப்போஸ்தலருடைய திருப்பண்டங்களுக்கு என்ன நேரிட்டது என்று மிகவும் வயதான பெரியவர்களிடம் கேட்டோம், அவர்கள் கூறியது :—

"1559-ம் ஆண்டில் விஜயநகரத்து அரசர்களாயிருந்த மூன்று சகோதரர்கள் இப்பட்டணத்திற்கு வந்து, பட்டணவாசிகள் செய்த எதோ ஒரு குற்றத்தினிமித்தம் பெரிய மனிதர்கள் 31 பேரைச் சிறைப்படுத்தி தங்கள் தலைநகரான சந்திரகிரிக்கு அழைத்துச் சென்றார்கள். பட்டணத்து வாசிகளுடைய சொத்து எதையும் அபகரிக்கவில்லை. ஆனாலும் அர்ச். தோமை அப்போஸ்தலருடைய எலும்புகளைக் கொண்டிருந்த பெட்டியையும், தேவமாதாவின் படத்தையும் கொண்டுபோய்விட்டார்கள். இவை இராஜ அரண்மனை வந்து சேரும்போது நடந்தது என்னவெனில்



அர்ச். தோமையார் மலைக் காட்சி. மலைமேல் ஏறிச்செல்வதற்கு அமைக்கப்பட்டிருக்கும் படிகளைப் படத்தில் பார்க்கலாம் .மலைமேல் இருக்கும் 2 பெரிய மரங்களுக்கு நடுவில் காணப்படுவதுதான் மலைக்கோவில்.

1523-ம் ஆண்டில் போர்த்துகீசியரால் மலைமேல் கட்டப்பட்ட கோவில். 1707-ம் ஆண்டில் கோஜா சாபார் என்ற அர்மீனிய கத்தோலிக்கரால் பெரிதாகத் திருத்திக் கட்டப்பட்டது.

மூன்று சகோதரர்களில் முதல்வனுன ராமராஜன் என்பவ னுடைய மனைவி, தேவதாயை ஒரு கனவில்கண்டு பயந்து அரசனிடம் சென்று அப்பரிசுத்தப் படங்களைத் திருப்பி அனுப்பி விடும்படியாய் கேட்டுக்கொண்டாள். அரசனும் அப்படியே அவற்றை ஒரு பல்லக்கில் வைத்து சாந்தோமே நகருக்கு அனுப்பும்படி கட்டளையிட்டான். அங்கே சிறைப்பட்டிருந்த **ஜில்வாஸ்** என்ற ஒரு பெரியவர் இவற்றை எடுத்துக்கொண்டு ஒரு காளை மாட்டின்மேல் எறி பட்டணத்துக்கு வந்ததாக" ஒருவர் சொன்னுர்.

அர்ச். தோமையாருக்கு விரோதமாகச் செய்த குற்றத் திற்கு தண்டனையாக மேற்கூறிய அரசர்கள் மகமதியர்களோடு செய்த சண்டையில் தோற்கடிக்கப்பட்டு, இரண்டுபேர் சண்டையி லேயே இறந்துபோனதாகவும், மூன்ருமவன் முகத்தில் கத்தி வெட்டுபட்டதாகவும், தங்களுடைய இராச்சியத்தையே இழந்து போனதாகவும், இங்கே இருக்கும் இந்துக்கள்கூட சொல்லு கிருர்கள் . . . .

"மேற்கூறிய ஜில்வாஸ் என்பவரிடமிருந்து இத்திருப் பண்டங்கள் கடைசியாக, அப்போது கொச்சி மேற்றிராணியா ராய் இருந்த **தோம் ஜார்ஜ் தெமுதோ** ஆண்டவரிடம் வந்து சேர்ந்தன. அவை இப்போது கொச்சி மேற்றிராசன ஆல யத்தில் வைக்கப்பட்டு இருக்கின்றன. அப்போஸ்தலரைக் குத்திய ஈட்டி முனையும் அங்கே இருக்கிறது. நாம் திரும்பவும் கொச்சிக்குத் திரும்பியவுடன், இப்பரிசுத்த பொருட்களை, சென் தோமிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு திருப்பி அனுப்பி விடுவதாக எண்ணியிருக்கிருேம். தங்களுடைய மகா பெரிய பாதுகாவல ருடைய இப்பொக்கிஷம் அவர்களிடத்தில் இல்லாமலிருப்பது சரியன்று."

தாம் எண்ணியபடியே மேற்றிராணி ஆண்டவர் 1601-ம் ஆண்டு எப்ரல் மாதத்தில் மேற்கூறிய திருப்பண்டங்களை சேன் தோமுக்கு அனுப்பிவிட்டார். இப்போது மைலாப்பூரில் ஈட்டி முனையும் ஒரு சிறு எலும்புத்துண்டும் தவிர வேருென்றும் இல்லை. அப்போஸ்தலருடைய மற்ற எலும்புத் துண்டு களுக்கு என்னவாயிற்று என்று சொல்லமுடியவில்லை.

10

பெரிய மலை கோவில்

போர்ச்சுகீசியர் கட்டிய முதற் கோவிலானது அர்மீனியர் களால் இன்னும் விசாலமாகவும் அலங்காரமாகவும் கட்டப்பட்டது. அவர்களில் **கோஜா ஸாபார் ஜக்கரியாஸ்** என்பவர் ஒருவர். அவர் 1725-ல் இறந்துபோனார். 1707-ம் ஆண்டில் விசாலமாகக் கட்டப்பட்ட கோவிலுக்குள் அவரை அடக்கம் செய்திருக்கிறது. கோவிலின் வடமேற்கு பாகத்தில் வெளியி லுள்ள சுவரில் பதித்திருக்கும் கற்பலகையில், போர்த்துகீஸ், அர்மேனிய பாஷைகளில் பொறித்திருப்பதாவது:— "கோவி லோடு சேர்க்கப்பட்டுள்ள இம்மண்டபம், **கோஜா ஸாபார் ஜக்கிரி யாஸ்** என்பவரால் 1707-ம் ஆண்டில் கட்டப்பட்டது." கோவில் 109 அடி நீளமும் 27 அடி அகலமும் உள்ளது. மண்ட பத்தின் முகப்பில் போர்ச்சுகல் அரசாங்கத்தின் இராஜமுத்திரை இருந்து வருகிறது.

மரத்தால் செய்யப்பட்டிருக்கும் கோவில் பீடத்தின் பின் புறத்தில் அர்ச். தோமையார் வேத சாட்சியாக கொல்லப்பட்ட காட்சி வர்ணத்தால் பலகையில் சித்தரிக்கப்பட்டிருக்கிறது. அதற்குமேல் இரட்டை வட்டத்துக்குள் ஒரு சிலுவை இருக் கிறது. சிறிய வட்டத்தைச் சுற்றி சில அர்மீனிய எழுத்துக் களால் அதை கொடையாய் அளித்த **பீட்டர் அஸ்கன்** என்பவர் பெயர் குறிப்பிட்டிருக்கிறது. மரத்தில் வேலைபாடுள்ள பிர சங்கத் தொட்டியைத் தாங்கியிருக்கும் மரத்தைச் சுற்றிலும் அர்மீனிய எழுத்துக்களோடு 1728 என்றும் குறிப்பிட்டிருக் கிறது. கோவிலின் வடகிழக்கிலிருக்கும் வில்வளைவான கட்டிடத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய அலமாரி இன்னும் நல்ல ஸ்திதியில் இருந்துவருகிறது. அதில் மேற்கூறியதைப் போன்ற எட்டு எழுத்துக்கள் மூன்று நான்கு இடங்களில்

இருக்கின்றன. இவைகளோடு 12 அப்போஸ்தலர்கள் அர்ச். சின்னப்பர், நமது ஆண்டவர் உட்பட 14 வர்ணப்படங்களும் அர்மீனியருடைய நன் கொடைகளாகும், பெரும்பாலும் **பேத்ருஸ் அஸ்கன்** என்பவரால் கொடையாய் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலே கோவிலிலுள்ள படங்களில் அப்போஸ்தலர்கள் கொண்டிருக்கும் சின்னங்களேயும் அவரவர் மரணமடைந்த விதத்தையும் குறிப்பிட்டிருக்கின்றது. அவைகள் கீழ்வருமாறு, கோவில் சுவற்றின் இருபுறங்களிலும் வரிசையாக தொங்கவிடப்பட்டிருக்கின்றன.

(1) அர்ச். இராயப்பர் சாவி பிடித்துக் கொண்டிருக்கிறார்.

(2) அர்ச். பெரிய யாகப்பர் யாத்திரைப் தடி பிடித்துக் கொண்டு ஒரு காகிதச் சுருளும் வைத்திருக்கிறார்.

(3) அர்ச். தோமையார் ஒரு புத்தகமும் ஓர் ஈட்டியும் வைத்திருக்கிறார்.

(4) அர்ச். அருளப்பர் விஷங்கலந்த பாத்திரத்தை வைத்திருக்கிறார்.

(5) அர்ச். சின்ன யாகப்பர் ஒரு புத்தகமும் ஓர் உத்தரமும் தாங்கியிருக்கிறார்.

(6) அர்ச். மத்தேயு ஒரு புத்தகமும் ஒரு தச்சு மட்ட பலகையும் வைத்திருக்கிறார்.

(7) அர்ச். ததேயு ஒரு புத்தகமும் ஒரு தண்டாயுதமும் வைத்திருக்கிறார்.

(8) அர்ச். மத்தியாஸ் ஒரு சிறு கோடாரியை வைத்திருக்கிறார்.

(9) அர்ச். பர்த்தலோமியூ ஒரு புத்தகமும் ஒரு வாள், வேறொரு பொருளும் கொண்டிருக்கிறார்.

(10) அர்ச். சைமன் ஒரு புத்தகமும் ஒரு வாளும் வைத்திருக்கிறார்.

(11) அர்ச். சின்னப்பர் ஒரு புத்தகமும் ஒரு வாளும் வைத்திருக்கிறார்.

(12) நமது இரட்சகராகிய ஆண்டவர்.

(13) அர்ச். பிலிப்பு ஒரு புத்தகமும் ஒரு சிலுவையும் வைத்திருக்கிறார்.

(14) அர்ச். பிலவேந்திரர் ஒரு புத்தகமும் ஒரு சிலுவையும் வைத்திருக்கிறார்.

மலைத் திருநாள்

அர்ச். தோமையார் மலையிலுள்ள ஆலயத்தின் வருடாந்திரப் பெரும் திருநாளானது **மாதா திருக்குழந்தையின் பிறப்பை எதிர்பார்த்த திருநாள்** தான்: அது கோயிலின் பெயர் கொண்ட திருநாள். அத்திருநாள் டிசம்பர் மாதம் 18-ம் தேதியில் கொண்டாடப்படும். ஊர் ஜனங்கள் அதை மலைத் திருநாளென்று சொல்லுவார்கள். கீழ் நாடுகளில் இத் திருநாள் மிக முக்கியமான திருநாளாயிருந்தது. மலையாளம் முழுவதும் டிசம்பர் மாதம் 18உ திருநாளென்று கொண்டாடப்பட்டு வந்தது. 1557-ம் ஆண்டிலிருந்து, மேற்கூறிய அற்புதச் சிலுவையின் ஞாபகமாக, அர்ச். தோமையார் மலை திருச்சிலுவை திருநாள் என்று மாற்றப்பட்டதாக தெரிய வருகிறது. ஏனென்றால் பீடத்தின் மேல் இருக்கிற சிலுவையானது அந்நாளில் அற்புதமாகத் தண்ணீர் கசிந்தது.

பரிசுத்த அப்போஸ்தலர் மடம்

மலையின்மேல் கோயிலுக்கு தென்கிழக்கின் கடைசியில் பரிசுத்த அப்போஸ்தலர் மடம் இருந்துவருகிறது. அதில் வசிக்கும் சகோதரிகள் "மரியாயின் பிரான்சீஸ்கு சபை சகோதரிகள்" சபையைச் சேர்ந்தவர்கள். அம்மடம் 1898-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

11

அர்ச். தோமையார் செய்ததாகச் சொல்லப்படும் புதுமைகள்

“**அர்ச். தோமையாருடைய செயல்கள்**” என்ற ஒரு பழைய சிரியக் பாஷை நூலில், நமதப்போஸ்தலரைப்பற்றி பல ஆச்சரியமான சம்பவங்கள் காணக் கிடைக்கின்றன. இது கி.பி. 3-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட நூலாயிருக்கலாம். இந் நூலில் நமது அப்போஸ்தலருடைய வரலாறும், பல கதை களும் கலந்திருக்கின்றன. அதில் காணும் கதைகள் எல் லாம் அப்படியே உண்மையாய் நிறைவேறின என்று சொல்ல முடியாவிட்டாலும், சிறிதேனும் உண்மையில்லையென்று சொல்லி விடமுடியாது. அதில் காணும் அற்புதச் சம்பவங்களுள் சிலவேனும் உண்மையாய் நடந்தன என்பதற்குச் சந்தேக மில்லை. அடியில்காணும் புதுமைகள் பாரம்பரியமாக அர்ச். தோமையார் பேரால் வழங்குவன.

மோட்சத்தில் அரண்மனை

தனக்கு ஓர் அழகிய அரண்மனை அமைப்பதற்குக் கை தேர்ந்த சிற்பி ஒருவனை அழைத்துவரும்படி தன் வியாபா ரிக்குக் கட்டளையிட்டான் இந்திய தேசத்து மன்னன். ஹாப் பான் என்னும் வியாபாரி மேல் நாடுகளுக்குச் சென்று, தோமை என்னும் முனிவரை அழைத்து வந்தான்.

அர்ச். தோமையார் இந்தியாவில் வந்திறங்கின பின் அரச னிடம் அழைத்து வரப்பட்டார். அரசன் அவரைப்பார்த்து, “நீர் எனக்கொரு அழகிய அரண்மனை அமைக்கக்கூடுமோ?” என்று கேட்டான் அரசன். “ஆம்! என்னுற் கூடும்” என்றுர் தோமையார். அவ்வாறு அவர் மொழிந்தபோது

தாம் இந்தியாவுக்கு வந்து அமைக்க நினைத்த **ஞான மாளிகை** யையே நினைத்துச் சொன்னார்.

வேலையைத் துவக்கி நடத்தும் பொருட்டு பெரும் திரவியத் தையும் அளித்தான்.

அப்போஸ்தலர் அதைப்பெற்றுக் கடவுளால் ஏவப்பட்டு, அந்த இராச்சியத்தின் பட்டணங்கள், கிராமங்களுக்குப்போய் ஏழைகளுக்கு இராஜாவின் திரவியத்தைத் தாராளமாக வழங்கி னார். நோயாளிகள் மீது இரங்கிக் கடவுளருளால் அவர் கட்கு ஆறுதல் அளித்தார். மெய்ம்மறையைப் போதிக்க இங்ஙனம் வசதியேற்பட்டது. அவரது போதனையைக் கேட்ட பலர் ஞானதீட்சை பெற்றனர்.

அரசன் இரண்டு வருஷகாலம் வெளியூர் போயிருந்து திரும்பிவந்தான். தான் ஏற்பாடு செய்த அரண்மனை முடிவு பெற்றிருக்குமென்றெண்ணி அதைப் பார்க்க ஆவல் கொண்ட போது, சுற்றியிருந்தவர்கள் "அரசே! மாளிகை ஒன்றும் கட்டப்படவில்லையே! அவர் இன்னும் அரண்மனை வேலையைத் தொடங்ினதாகத் தெரியவில்லை. அதற்குமாறாக நமது இராச்சியத்தில் பல திசைகளுக்குப் போய் ஜனங்களுக்கு ஒரு நூதன மதத்தைப் போதித்து, அவர்களிற் பல்லோரைத் தம் வசப்படுத்தியுள்ளார். அவர் போதிப்பது நவீனமாகவே இருக்கிறது. பேயை ஓட்டுகிறார், வியாதியஸ்தரை குணப்படுத்து கிறார், மரித்தோரை உயிர்ப்பிக்கிறார். இவர் ஒரு மந்திர வாதி என்பதில் ஐயமின்று, நாடெங்கும் உமது பிரஜைகளை ஏமாற்றிக்கொண்டு திரிகிறார்", என்றார்கள்.

இதைக் கேட்டவுடன், அரசன் கோபம் கொண்டு, "உடனே அவனை இங்கே இழுத்துக் கொண்டு வாருங்கள்," என்று கட்டளையிட்டான். அவர் வந்தவுடன், "நான் கட்டளையிட்ட மாளிகை எங்கே" என்று கதறினன்.

"அரசே! உமது மாளிகை கட்டியாகிவிட்டது. ஆனால் அது இப்பூமியிலல்ல. பரலோகத்திலிருக்கின்றது. அங்குப் போய்ச் சேர்ந்தவுடன் அதை நீர் பார்த்துப் பிரமிப்பீர்," என்று சாந்தமாகச் சொன்னார் தோமையார்.

"என்ன ! நீ எங்களை ஏமாற்றுகிருயா ? நாங்கள் முழு மூடர்கள் என்று நினைத்தனையா ? உன் மாயப்பேச்சால் நான் மகிழ்ந்திடமாட்டேன்," என்று கத்திக்கொண்டு, அப்போஸ்தல ரையும், ஹாப்பாணையும் சிறையிலிடக் கட்டளையிட்டான்.

அப்போஸ்தலரோ பயமின்றி ஹாப்பாணைப் பார்த்து, "சிநே கிதா ! அஞ்சாதே ! கடவுள்மேல் நம்பிக்கையாயிரு", என்று ஆறுதல் சொன்னுர்.

அரசனே அப்போஸ்தலரை எப்படிச் சாகடிப்பதென ஆலோ சித்து, கடைசியாக இருவரையும் உயிருடன் தோலுரித்து நெருப் பிலிட்டுக் கொல்வதே தகுந்த தண்டனையாகுமெனத் தீர் மானித்தான்.

அவர்களிருவரும் சிறையிலிருக்கையில் அரசனின் இளைய சகோதரன் **காத்** என்பவன் இறந்தான். அவன் சடலத்தை ஆடம்பரத்துடன் ஊர்வலம் கொண்டுவந்து அடக்கம் செய்யும் படிக் கட்டளையிட்டான் அரசன்.

மரித்த நாலாம் நாள் முதல் நாழிகையில், உற்றுர் உற வினர் சூழ்ந்திருக்க, பூசாரிகள் மந்திரங்கள் ஓதி சேமச்சடங்கு கள் நடத்துகின்றனர். மனவருத்தத்தின் நிமித்தம் அரசன் அங்கு இல்லை. சடங்கு ஆரம்பித்ததும் ஓர் ஆச்சரிய சம்பவம் நேரிட்டது. பிரேதம் கட்டிலைவிட்டெழுந்து, அக்கம் பக்க மெல்லாம் திரும்பித் திரும்பிப் பார்த்துவிட்டுத் தான் தேடுகிற வர் அருகிலில்லை என்றறிந்ததும், சுற்றி நின்ருேரை நோக்கி, "என் சகோதரரை அழைத்து வாருங்கள்," என்று கூவினுன். உடனே அரசனிடம் தூதன் விரைந்தோடி, "அரசே, உமது சகோதரர் உயிர்த்துவிட்டார்," என, உடனே எழுந்து ஓடி வந்தான். இதயம் துடிக்க அச்சம் மேலிட்டவனய், வாய் பேச இயலாது ஸ்தம்பித்துப் போய்விட்டான் அரசன். அப் போது **காத்,** பயம் வேண்டாம் எனும் வண்ணம் சயிக்கினை காட்டித் தமயனைப்பார்த்து, "அண்ணு நீர் இவ்வளவு காலம் பெருந் திரவியஞ் செலவிட்டுச் சம்பாதித்த பொக்கிஷத்தை எனக்குத் தயவு செய்து விட்டுவிடுவீராக," என்று மன்ருடினுன்.

"நான் உனக்குக் கொடுக்கக்கூடிய பொருள் எது சொல்?" என்றான் தமையன். எனக்கு விற்று விடுவதாக முதலில் வாக்குக் கொடு," என்றான் **காத்**. தனக்குச் சொந்த மானவைகளில் எதைக் கேட்பினும் மறுக்காதளிப்பதாகச் சத்தியம் செய்தான். இவ்வாறு உறுதிமொழிபெற்ற தமையனை நோக்கி, "அண்ணா! மேல் உலகில் நீர் வாங்கியிருக்கும் மாளிகையை எனக்கு விற்றுவிடும்," என்று ஆவலோடு கேட்டான். "சகோதரா, யார் எனக்கு அந்த மாளிகையை யளித்தது?" என்றான் அரசன். அதற்கு "அண்ணலே! நெருப்பிலிட்டுக் கொன்று போடும்படி ஒருவரைமறியலில் வைத்திருக்கின்றீர். அவர் ஒரு மஹாத்மா! கடவுளுக்குகந்த புண்ய சீலர். நான் மரித்தவுடன் தேவதூதர் என்னைப் பரலோகம் கொண்டுபோயினர். ஆங்கு ஒரு பிரமாண்ட மாளிகையைக் கண்ணுற்றேன். அதன் அழகு அலங்காரம் எடுத்துக்கூறுந் தரமன்று.

"இது தோமையார் உனது சகோதரனுக்காகக் கட்டியுள்ள அரண்மனை. ஆனால் அவன் அதற்கு அபாத்திரனாகிவிட்டான். ஆகையால் தோமையார் உனக்காக மன்றாடினார். உன் தமையன் எழைகளுக்குத்தர விரும்பாத பணத்தை நீ யவனுக்கு ஈடு செலுத்திவிட்டு இம்மாளிகையைக் கைப்பற்றிக்கொள், என்று வானவர் வாழ்த்தினார்கள்," எனக் கூறினான்.

இதைக் கேட்ட அரசன் திகில்கொண்டு, "தோமாவின் கடவுளே என் அறியாமையை மன்னித்து என்பால் இரங்கும்" எனப் பச்சாதாபத்துடன் வேண்டினான்.

காத் உடனே படுக்கையை விட்டெழுந்து ஜனங்களினூடே ஓடிச் சிறைச் சாலைக்குச் சென்று தோமையார் பாதத்தில் விழுந்து வணங்கி, "ஆண்டவரின் அப்போஸ்தலரே, என் தமையன் செய்த தப்பிதத்தை பொறுத்தருள்வீராக," என மன்றாடினான். தோமையார் அவனை முகமலர்ச்சியோடு உற்று நோக்கித் தமது கரங்களால் அவனது நெற்றியில் சிலுவை யடையாளம் வரைந்து, "என் மகனே சர்வேசுரனுடைய சமாதானம் உன்னிடம் இருப்பதாக என்று ஆசீர்வதித்தார்."

சென்னை அர்ச். தோமையார் மலை கோவிலில் பூசிதமாய் வணங்கப்பட்டு வரும் புதுமையுள்ள நமது கன்னி நாயகியின் படம். இப்படம் அர்ச். லூக்காவினல் இயற்றப்பெற்று, அர்ச். தோமை அப்போஸ்தலர், இந்தியாவுக்கு 52-ஆம் ஆண்டில் வந்தபோது, தம்முடன் கொண்டுவரப்பட்டதாக பாரம்பரையாக விளங்குகின்றது.

தோமையார் உடனே சிறைவிட்டு வெளியேறி வர, அரசன் எதிர்கொண்டு சென்று அப்போஸ்தலரைக் கண்டதும் பிழையைப் பொறுக்கும்படி அவரை வேண்டினன். "கடவுளுக்குகந்த புண்ணியரே! தேவரீர் எனக்காக மோட்சத்தில் கட்டிய மாளிகையை அடியேன் சுதந்தரிக்கும்படி உமதாண்டவராகிய சேசுகிறீஸ்துவை எனக்காக மன்ருடும். நீர் போதிக்கும் தேவனின் மெய்யான ஊழியனுக நான் ஒழுகும்படி எனக்குதவி செய்தருளும்" என்று, உருக்கமாகக் கேட்டுக் கொண்டான். இரு சகோதரர்களும் கடவுளுக்கு ஸ்துதி செய்ய தோமையாரோடு தங்கிவிட்டனர். ஏழு தினங்கள் வரையில் அவர்கள் அறியவேண்டிய வேத சத்தியங்களை அவர்களுக்குக் கற்பித்தபின், இருவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார் தோமையார்.

தண்ணீரை அந்தரத்தில் நிறுத்தியது

ஒரு நாள் நமது அர்ச். தோமையார் பாலையூரிலுள்ள அக்ரகாரத்திற்குச் (பிராமணர்கள் வசித்துவந்த பகுதிக்கு) சென்ருர். அங்கிருந்த குளமொன்றில் பிராமணர்களும் மற்றவர்களும் குளித்துக் கொண்டிருந்தார்கள். சிலர் தண்ணீரை ஆகாயத்தில் தலைக்குமேல் எறிந்தனர். அங்ஙனம் தண்ணீரைத்தூக்கி ஆகாயத்தில்விட்டதன் காரணத்தை அப்போஸ்தலர் கேட்க அவர்கள் "தண்ணீரைத் தேவர்களுக்குக் காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்ருேம்," என்று சொன்ஞர்கள்.

ஆகாயத்தில் எறிந்த தண்ணீர் திரும்பவும் கீழே விழுந்துவிடுவதைக்குறித்து அவர்களிடம், "நீங்கள் சமர்ப்பிக்கும் ஜலத்தைத் தேவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லைபோலும்!" என்று கேட்டார். அதற்கு மறுமொழியாக அவர்கள் "தண்ணீரின் இயற்கை அது திரும்பவும் கீழே விழுவதுதானே", என்று சொன்ஞர்கள். இதன்மேல் அர்ச். தோமையார் "சகலத்தையும் படைத்த கடவுளுக்குத் தண்ணீரும் கீழ்ப்படியும்" என்று சொல்லி தண்ணீரை எடுத்து ஆகாயத்தில் எறிந்தார். அந்த ஜலம் சிறு நீர்த் துளிகளாகப் பிரிந்து ஆகாயத்திலேயே தங்கி வைரக்கற்கள்போல் பிரகாசித்து, பின்பு மணமிகுந்த

மலர்களாக அவர் பாதத்தில் வந்து விழுந்தன. இந்த அற்புதத்தைப் பார்த்த பலர் அர்ச். தோமையாரின் போதனையை ஏற்றுச் சத்திய மறையில் சேர்ந்தார்கள். வேறு சில வைதீகர்கள் அங்குள்ள கிறீஸ்துவர்களை மேற்கொள்ள முடியாதது கண்டு அப்பாலையூரைவிட்டு வெளியேறியதுமன்றி அவ்வூருக்கு "சவக் காடு" என்ற எளனப் பெயரிட்டனர். மேலும் அன்று முதல் அக்குளத்தில் குளிப்பதுமில்லை. அவ்வூருக்கு வந்தால் சாப்பிடுவதுகூட இல்லை.

பெரிய மரத்தை நகர்த்தியது

அர்ச். தோமையார் மைலாப்பூரில் இருந்தபோது ஒரு சமயம் மைலாப்பூரின் கடற்கரையில் ஒரு பெரிய மரம் வந்து ஒதுங் கியது. இம்மரம் கப்பல்கள் வந்து தங்குவதற்கு தடங்கலாய் இருந்ததால் மைலாப்பூரின் அரசன் **இராஜ மகாதேவன்** அம் மரத்தை அகற்றுவதற்காகப் பல யானைகளையும் ஆட்களையும் ஏவினான். அவர்களால் அம்மரத்தை அகற்ற முடியாமை யைக் கண்ட அரசன் மந்திரவாதிகளையும், பூசாரிகளையும் வர வழைத்து மந்திரங்களையும் பூஜைகளையும் செய்யச் சொன்னான். அந்த முயற்சியும் கைகூடாமற் போயிற்று. அரசன் அவர் களைக் கடிந்து அனுப்பிவிட்டு தனது படைகளையும் 300 யானை களையும் அனுப்பி மரத்தை வெளியகற்ற முயன்றான். பய னில்லை. இச்சமயத்தில் அர்ச். தோமையார் அந்த அரசனை அணுகி தாம் கோவில் ஒன்று கட்டப்போவதாகவும் அதற்குப் பெரியதோர் மரம் தேவை என்றும், அம்மரத்தைக் கொடுத் தால் தாம் அகற்றி எடுத்துக்கொள்வதாகவும் கூறினார். இதைக் கேட்ட அரசன் அவ் நம்பிக்கை கொண்டவனாய், "நீ எனது படைகளையும், யானைகளையும்விட பலசாலியோ? உன் னால் கூடுமானால் அகற்றி எடுத்துக்கொள்" என்றான். தோமை யார், "நான் பலசாலியல்ல. ஆனால் நான் ஆராதிக்கும் தெய்வம் வல்லமையுள்ளவர்" என்று சொல்லி தமது கச்சையை அவிழ்த்து ஒரு முனையை மரத்தில் கட்டி மற்றொரு முனையைப் பிடித்துக்கொள்ளச் சொன்னார். பின்பு சற்றுச் செபித்து மரத்தின்மேல் சிலுவை அடையாளம் வரைந்து, இழுக்கும்படிச்

சொன்னார். ஒருவனே அதை இழுத்துக்கொண்டு கோவில்கட்டும் இடத்தில் சேர்த்தான். இதைக் கண்ட அரசன் அவரைப் பெரிதும் போற்றி, கோவில் கட்டுவதற்கு வேண்டிய மற்ற சன்மானங்களையும் வழங்கினான்.

குழந்தை சாட்சி சொன்னது

அர்ச். தோமையார் செய்த பல அற்புதச் செயல்களைக் கண்ட இராஜ மகாதேவன் என்ற அரசனின் மைத்துனன், கிருஷ்ண னின் மனைவியாகிய **மகுதானி** என்பவள் கிறீஸ்துவில் நம் பிக்கை கொண்டு கிறீஸ்து மறையில் சேர்ந்தாள். இதைக் கண்ட கிருஷ்ணனும் அரசனும் அர்ச். தோமையாரைச் சிறைப் படுத்தினர். சிறையில் ஏற்பட்ட சித்திரவதைகளை அற்புதமாய் மேற்கொண்டதால் இவரை வதைத்து வெற்றிகொள்ள முடி யாது என்று கண்ட அரசன் காளிக்கு பூஜை செய்யும்படி அவருக்குக் கட்டளையிட்டான். காளி கோயிலுக்கு அழைத்துச் செல்லப்பட்ட அப்போஸ்தலர், தேவ திருவருளால் காளிச் சிலையிலிருந்த பசாசை ஓட்டினதுமன்றி, அக்கற்சிலையும் கரையும் படி செய்தார். இதனிமித்தம் பொறாமை கொண்ட பிராம ணர்கள் அவரைத் தொலைத்துவிடக் கருதினார்கள். ஆகை யால் அக்காளிக் கோயிலின் பூசாரி பசாசின் ஏவலின்பேரில் தனது சொந்தக் குழந்தையைக் காளிக்குப் பலியிட்டு, பிறகு தானே அரசனிடம் வந்து தோமையார் குழந்தையைக் கொலை செய்ததாக முறையிட்டான். அரசன் சினந்து அவரை வர வழைத்து கொலைக் குற்றத்திற்குச் சமாதானம் கேட்டான். அர்ச். தோமையாரோ அதற்குச் சிறிதும் கலங்காதவராய், இறந்த குழந்தையின் சடலத்தைக் கொண்டுவரும்படி கேட்டுக்கொண் டார். அவ்வாறு பிரேதம் கொண்டுவரப்பட்டதும், இறந்த சிசுவின் கையைப்பற்றி “சேசுவின் பெயரால் உனக்குச் சொல் லுகிறேன், நீ எழுந்து உன்னைக் கொன்ற பாதகன் யார் என்று கூறு” என்று மொழிந்தார். இறந்த குழந்தை எல்லோரும் வியக்க உயிர் பெற்றெழுந்து “என்னைக் கொன் றது என் தந்தையே” என்று மொழிந்தது. இதைக் கண் ணுற்றுக் கேட்டவர்கள், தன் சிசுவைக் கொன்றவனும் நமது

மாசற்ற அப்போஸ்தலர் மீது அபாண்டம் சுமத்தியவனு மாகிய அந்தணனைத் தூஷித்து, அர்ச். தோமையார் மீது விசு வாசம் கொண்டனர்.

அரசனோ மிகவும் பயங்கொண்டவனாய் அவரைத் திரும்ப வும் சிறையிலிட்டான்.

அர்ச். தோமையார் சிறையிலிருக்கும்போது செய்த ஒரு பிரசங்கம்

அர்ச். தோமையார் சிறைப்பட்டிருக்கையில் அவரைப் பெருந் திரளான சனக்கூட்டம் சென்று கண்டு, அவருடைய போதனை யைக் கேட்டுவருவது வழக்கமாயிருந்தது. அவ்வாறு ஒரு நாள் ஜனங்கள் வந்திருக்கையில் அவர்களை ஆசீர்வதித்து, அவர்களை நோக்கி, "மிகவும் பிரியமுள்ள மக்களே! நான் இதுகாறும் உங்களுக்குப் போதித்துவந்த கடவுளையே விசுவசி யுங்கள். நமது பாவங்களினிமித்தம் பாடுபட்ட சேசுவையே நம்பி இருங்கள். அண்டினோரை ஆதரிப்பவரும், சேவிப்பவரைக் காப்போரும், கஸ்திப்படுபவர்களுக்கும் துன்பப்படுபவர்களுக்கும் ஆறுதலும், தேற்றுதலும் அவரேயாவர். அவரையன்றி இவ் வுலகில் யாரும் இரட்சணியமடைய முடியாது. அவர்மட்டில் விசுவாசம் உள்ளவன் எவனும் பரிசுத்தமாகின்றான். அவரே உண்மை, அவரே மோட்ச வழி, அவரே அனைவருக்கும் ஏக கதி. ஆகையால் அவரையே விசுவசித்து நம்பி வழிபடுங்கள். ஆராதியுங்கள். நான் அவரை அக்களிப்புடன் ஆராதிக்கின் றேன். ஏனெனில் அவரிடம் போக எனக்கு மட்டற்ற ஆவல் உண்டு.'' பின்பு தமது கண்களை வானத்திற்கு உயர்த்தி "என் ஆண்டவரே, என் தேவனே, என் ஏக நம்பிக்கையே உமது திருவுளப்படி ஆகக்கடவது. என் கடைசி காலம்வரை என் னுடனே இருப்பீராக! இந்நாட்டில் ஒரு திராட்சைக் கொடியை நாட்டினேன். ஆழ்ந்து வேரூன்றி கிளைகள் பல பக்கம் விட்டு, ஓங்கி வளர்ந்து ஏராளமான கனிகளையும் கொடுப்பதாக. இந்த சனங்கள் உம்மிடம் வரப்பாத்திரவான்களாகட்டும். கிறீஸ்து வான தேவனே! நான் தேடின இவர்களுடைய ஆத்துமங்கள் தேவரீருக்கு உகந்தனவாகக் கடவன. உமது கற்பனைகளை



அர்ச். தோமையாரைக் குத்திக்கொன்ற ஈட்டி முனையும், அவருடைய எலும்பின் ஒரு சிறு துண்டும் தன்னுள்ளடக்கிய அருளிக்கக் கதிர் பாத்திரம். இது இப்போது அர்ச். தோமையார் மேற்றி ராசனக் கோவிலில் பாதுகாக்கப்படுகிறது.

தமது பிரசங்கம் கேட்க வந்த திரளான ஜனங்களுடைய தாகம் தணிப்பதற்காக அர்ச். தோமையார் அற்புதமாக வருவித்த நீரூற்று. இதில் தண்ணீர் வற்ருமல் எப்போதும் இருக்கிறது.

நிறைவேற்றினேன். உமது சித்தப்பிரகாரம் நடக்க பின் வாங்கினேனில்லை. ஆகையால் வெற்றியின் முடியைத் தேவரீர் எனக்குத் தந்தருளும்'' என்று மிகவும் உருக்கத்துடன் செபித்தார்.

அர்ச். தோமையாருடைய தீர்க்கதரிசனம்

அர்ச். தோமையார் மைலாப்பூரில் இருந்தபோது, கடற்கரை இப்போது இருக்கும் இடத்திலிருந்து ஏறக்குறைய 40 மைலுக்கு அப்பால் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. மைலாப்பூர் என்ற பட்டணமும் ஒரு பெரிய அரசனின் தலைநகரமாக இருந்தது. இப்பழைய மைலாப்பூரை காலக்கிரமத்தில் (வங்காளக் குடா) கடல் கொண்டதாக எண்ணப்படுகிறது. சென்னைக்கு 35 மைல் தூரத்திலிருக்கும் மஹாபலிபுரத்தின் கடற்கரையிலும் இன்றும் காணப்படுவதுபோல மைலாப்பூர் கடற்கரையிலும் சற்றுத் தூரத்தில் அக்கடல் கொண்ட கோபுரங்களின் முனைகள் தென்பட்டதாகச் சில காலத்துக்கு முன்னே சிலர் கூறினர். இங்ஙனம் மைலாப்பூரைக் கடல் கொண்டுவிடும் என்று அர்ச். தோமையாரே முன்னறிவித்ததாக சொல்லப்படுகிறது.

“தாம் கட்டிய கோவில் வரைக்கும் கடலானது சிறிது சிறிதாக வருங்காலத்தில் மேல் நாட்டிலிருந்து ஒரு ஜாதியார் வந்து தாம் படிப்பித்த போதனைகள் எல்லாம் திரும்பவும் படிப்பிப்பார்கள்'' என்று அர்ச். தோமையார் தீர்க்கதரிசனமாகக் கூறினாரென்று பழைய கதை யொன்றிருக்கிறது.

இதில் கூறப்பட்ட மேல் நாட்டு ஜாதியார் போர்ச்சுகீசியரே யாவர். அவர்கள் மைலாப்பூருக்கு வரும்போது, கடல் இப்போது இருப்பதுபோலவே அவருடைய ஆலயத்திற்கு அருகாமையில் இருந்ததென்பதற்கு சந்தேகமில்லை. பழையதொரு போர்த்துகீசிய கொடிமரம் இன்றைக்கும் கடலோரத்திலிருப்பதை யாவரும் காணலாம். பழைய மைலாப்பூரைக் கடல் கொள்ள அதற்கு மேற்குப்புறத்தில் புது மைலாப்பூர் இருந்ததாக இந்துக்களே இன்றைக்கும் சொல்லுவார்கள்.

இந்தியாவின் அப்போஸ்தலராகிய

அர்ச். தோமையாருக்கு

நவநாள்

அர்ச். தோமையாருக்கு நவநாள் ஜெபங்கள்

முதல் நாள்

அர்ச். தோமையார் தெய்வ ஏவுதலுக்கு உடனே கீழ்ப்படிந் தார். கலிலேயா நாட்டில் கிறீஸ்துநாதர் தமக்குச் சீஷர் களை அழைத்தபொழுது, மற்றவர்களைப்போலவே எவ்வித தயக்க முமின்றி கிறிஸ்துநாதரைப் பின்பற்றினார். இவ்விதம் கட வுளுடைய அழைப்பிற்கு உடனே இணங்கி, எவ்வித முறு முறுப்பும் சோர்வும் இன்றி கிறீஸ்துநாதரோடு ஒன்று சேர்ந்து, கடவுளுடைய இராச்சியத்தை உலகெங்கும் போதிக்க துணை யாயிருந்தவர்களுள் அர்ச். தோமையாரும் ஒருவராயிருக்கும் பாக்கியம் பெற்றார். அப்போஸ்தலர்களுக்கென கடவுள் தயா ரித்து இருக்கும் விசேஷ மகிமையும் அடையலானார்.

ஆத்தும இரட்சண்யம் அடைவதற்கும் நமது கிறீஸ்துவ ஜீவியத்தில் வளர்ச்சியும், பரிபூரணமும் பெறுவதற்கும் கட வுளுடைய ஞான ஏவுதல்களையும் அவரது வரப்பிரசாதத்தின் தூண்டுதல்களையும் சுறுசுறுப்போடும் முறுமுறுக்காமலும் தயங் காமலும் பின்பற்றுவது அவசியம். அந்தத் தேவ ஏவுதல் கள் எவ்வளவு கஷ்டமான காரியத்தை செய்யும்படி நம் மைத் தூண்டினாலும் அங்ஙனம் செய்ய நாம் தயாராயிருக்க வேண்டும்.

இத்தகைய சுறுசுறுப்பையும் ஊக்கத்தையும் கடவுளிட மிருந்து பெற்றுத்தருமாறு அர்ச். தோமையாரை வேண்டிக் கொள்வோமாக.

செபம்

அர்ச். தோமையாரே ! கிறீஸ்துநாதருடைய அழைப்புக்குக் கீழ்ப்படிந்து அவருக்காக உம் உயிரையும் மதிக்காமல் அவ ரோடு சாவதற்கு தயாராயிருந்த அப்போஸ்தலரே, நாங்கள்

எத்தனையோ முறை கிறீஸ்துநாதருடைய அழைப்புக்கும், தூண்டுதலுக்கும் கீழ்ப்படியாமலும் கடவுளுடைய உள்ளரங்க ஆத்தும குரலைக் கேட்காமலும் அசட்டையாகவும் பாவத்தில் பிடிவாதத்தோடும் நடந்து கொண்டதற்காக மனம் வருந்துகிறோம்.

உமது முன்மாதிரிகையினுலும் உமது மன்ருட்டின் உதவியினுலும் நாங்கள் இனிமேல் சர்வேசுரனுடைய வரப்பிரசாதத்தை எதிர்த்து நடக்காமல் அவருடைய அன்பின் ஏவுதலுக்கு எப்போதும் பணிந்து ஜீவிக்கும்படி எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மன்ருட்டுகள்

(1) அர்ச். தோமையாரே! **எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.**

(2) கிறீஸ்துநாதருடைய பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவராயிருக்க பாக்கியம் பெற்ற அர்ச். தோமை. எ. வே. . . . . .

(3) நித்திய சமாதானத்துக்குரிய சுவிசேஷத்தை போதிக்கச் சர்வேசுவரனுல் தெரிந்து கொள்ளப் பட்ட, அர்ச். தோமை. எ. வே. . . . . .

(4) உலக இரட்சகரை ஆவலோடு பின்பற்றியவரான, அர்ச். தோமை. எ. வே. . . . . .

(5) கிறீஸ்துநாதரோடு மரித்து அவர்மேல் உமக்கிருந்த அன்பைக்காட்ட தயாராயிருந்த அர்ச். தோமை. எ. வே. . . . . .

(6) கிறீஸ்துநாதரை உண்மையாகவே கடவுள் என்றும் உலக இரட்சகரென்றும் விசுவசித்து அவர் பாதங்களில்விழுந்து ஆராதித்த, அர்ச். தோமை. எ. வே. . . . . .

(7) கிறீஸ்துநாதருடைய காயங்களைத் தொட்டு அவருடைய தேவ சுவாபத்தையும் மனுஷ சுவாபத்தையும் ஆராதித்த அர்ச். தோமை. எ. வே. . . . . .



மைலாப்பூர், அர்ச். தோமையார் மேற்றிராசனக்கோவில். அப்போஸ்தலருடைய கல்லறை.



அர்ச். தோமையார் மேற்றிராசன ஆலயத்தின் பெரிய பீடமும் அதைச்சேர்ந்த திருஸ்தல பாகமும்.



மைலாப்பூர், அர்ச். தோமையார் கோவில் உட்புறம்.

(8) கிறீஸ்துநாதரில் எங்களுக்கு உண்மையான விசுவாசம் இருக்கும்படியாக, அர்ச். தோமை. எ. வே. . . . . . .

(9) நாங்கள் கிறீஸ்துநாதரை உண்மையான பற்றுதலுடன் ஆராதித்து நேசிக்கும்படியாக, அர்ச். தோமை. எ. வே. . . . . . .

(10) கிறீஸ்துநாதருக்காகவும், எங்கள் விசுவாசத்திற்காகவும் எங்கள் உயிரையும் கொடுக்க நாங்கள் தயாராயிருக்கும்படியாக, அர்ச். தோமை. எ. வே. . . . . . .

(11) கிறீஸ்துநாதருடைய பரிசுத்த சுவிசேஷம் உலகெங்கும் பரப்பும்படியாக, அர்ச். தோமை. எ. வே. . . . . . .

(12) நீர் சுவிசேஷம் போதிக்க வந்த இந்த இந்தியா தேசம் மனந்திரும்பும்படியாக, அர்ச். தோமை. எ. வே. . . . . . .

குறிப்பு :—(இம்மன்ருட்டுகளை நவநாளில் ஒவ்வொரு நாளும் சொல்லவும்.)

இரண்டாவது நாள்

தாம் பாடுபடுவதற்குச் சில காலத்துக்குமுன் கிறீஸ்துநாதர் தமது சீஷர்களை நோக்கி, "யூதேயாவுக்கு மறுபடியும் போவோமாக" என்று சொன்னபோது, சீஷர்கள் அவரை நோக்கி "ஆண்டவரே, இப்போதுதான் யூதர்கள் உம்மைக் கல்லால் அடிக்கத் தேடினார்களே ! திரும்பவும் அங்கே போகிறீரா ?" என்று அவரோடு போகத் தயங்கினார்கள். தம்முடைய குருவோடு போவதால் தங்கள் உயிருக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் என்று பயப்பட்டார்கள். இப்படி மற்றெல்லோரும் பின் வாங்கும்போது, தோமையார் மட்டும் தைரியத்தோடும், முழு இருதயப் பற்றுதலோடும் "**நாமும் அவரோடு சாவதற்குப் போவோமாக,**" என்று எல்லோரையும் தூண்டினார். இங்ஙனம் தம் தெய்வ குருவின் மீதிருந்த அன்பின் ஆர்வத்தைக்

காட்டினார் நமதப்போஸ்தலர். இப்பேர்ப்பட்ட ஆர்வமும் அன்பும், தைரியமும், விசுவாசமும் நம்மிடத்தில் இருக்கும்படி அவரை வேண்டிக்கொள்வோமாக.

செபம்

ஆண்டவராகிய சேசுகிறீஸ்துவே உம்மைத் தாழ்ச்சியோடும் சந்தோஷத்தோடும் பின்பற்றும் உமது ஊழியர்களுக்கு உமது கட்டளைகளின் பாரம் இனிமையாய் இருக்கும்படி செய்தருளுகிறீரே, உமது அப்போஸ்தலரான அர்ச். தோமையார் உம்மை ஆர்வத்தோடு பின்பற்றி, உமது போதனைகளைத் தாழ்ச்சியோடு ஏற்று, உமது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, மற்ற அப்போஸ்தலர்கள் எல்லோரும் பின்வாங்கினபொழுதும் உம்மோடு மரிக்கத் தயாராயிருந்து, கடைசிவரையிலும் உமக்கு பிரமாணிக்கமாயிருக்க ஆவலாயிருந்ததுபோலவே—நாங்களும் உம்முடைய படிப்பினைகளை ஆர்வத்தோடு ஏற்று, உமது கற்பனைகளுக்கு எப்போதும் கீழ்ப்படிந்து, எந்த இடைஞ்சலுக்கும் பயப்படாமல், உயிரே போவதாயிருந்தாலும் கடைசிவரைக்கும் உமக்குப் பிரமாணிக்கமாயிருந்து, உம்மை ஆர்வத்தோடு நேசிக்க வரம் தந்தருளும். உம்முடைய அப்போஸ்தலராகிய அர்ச். தோமையாருடைய பேறுபலன்களை முன்னிட்டும் உமது திருப்பாடுகளின் பேறுபலன்களை முன்னிட்டும் எங்கள் தெய்வீக இரட்சகராகிய தேவரீர் எங்களுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களைத் தந்தருளுவீரென்று நம்பியிருக்கிறோம்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . .

மூன்றாவது நாள்

கடைசி இராப்போஜனத்தின்போது கிறீஸ்துநாதர் தமது சீஷர்களைப்பார்த்து "நான் எவ்விடம் போகிறேன் என்றும் அறிந்திருக்கிறீர்கள். வழியையும் அறிந்திருக்கிறீர்கள்," என்று சொல்ல, தோமையார் அவரை நோக்கி, "ஆண்டவரே நீர் போகிறது எவ்விடமென்று அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறியக்கூடும்," என்று கேட்டார். அதற்கு ஆண்டவர், "நானே வழியும், சத்தியமும், ஜீவனும்" என்றார். கடவு

ளிடம் செல்ல வழி எதுவென்று முதலில் அப்போஸ்தலர் களுக்குத் தெரியாமலிருந்தது. நமதாண்டவரே அவ்வழி யென்று அவர்கள் கண்டுபிடிக்க அவர்களுக்கு விசேஷ தேவ உதவி தேவையாயிருந்தது. அஞ்ஞானமும், அநீதமும், பொய்யும் புரட்டும் பாவமும் நிறைந்துள்ள இவ்வுலகத்தில் உண்மையான ஞானத்தின் வழியைக் கடைப்பிடிக்க நமக்கு அதிக தேவவரம் தேவையாயிருக்கிறது. "இவ்வரத்தை நாம் நிறையப் பெற்றுக்கொள்வதற்கு நமது பரிசுத்த அப்போஸ் தலருடைய உதவியைத் தேடுவோமாக.

செபம்

அர்ச். தோமையாரே! நீர் எங்கள் முன்னோர்களுக்குச் சுவி சேஷத்தைப் போதித்து, அவர்களில் அநேகரை மனந்திருப்பி மோட்சம் சேர்த்தீரே! அவர்களுடைய பிள்ளைகளாகிய நாங் களும் அதே சுவிசேஷத்தைச் சிறிதும் குறைவில்லாமல் அனு சரித்து இரட்சண்யம் அடைய எங்களுக்கு உதவி செய்தருளும். உமது திருப்பாதம் மிதித்த இந்நாட்டில் பிறந்திருக்கிற நாங்கள் விசுவாசத்தில் எங்கள் தந்தையாகிய உமது அடைக்கலத்தை அண்டிவருகிறோம். கிறீஸ்துவ விசுவாசத்தில் ஒருநாளும் தத்தளியாமல் உறுதியுடன் நிலைப்புதோடு நாடெங்கும் அதைப் பரம்பச் செய்யவும், எல்லோரும் கிறீஸ்துநாதரை அறிந்து நேசிக்க உதவியாயிருக்கவும் உமக்கு யோக்கியமான பிள்ளை களாய் நடக்கவும் எங்களுக்காக மன்றாடி யருள்வீராக.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . . .

நான்காவது நாள்

கிறீஸ்துநாதர் உயிர்த்ததாக மற்ற அப்போஸ்தலர் கள் தோமையாருக்குச் சொன்னபோது அவர் அதை உடனே நம்பவில்லை. ஆனால் ஆண்டவரைத் தாமே நேரில் கண்டு அவர் விலாக்காயத்தில் கைவைத்தவுடன் ஆண்டவருடைய இருதயத்தினின்று ஞானப் பிரகாசமானது ஒரு பெரும் வெள்ள மென அப்போஸ்தலருடைய இருதயத்தில் பாய்ந்ததுபோல, ஒரு நொடியில் அவருடைய இருதயமானது முழுதும் மாறி, தெய்வ

வெளிச்சத்தைக் கண்டவராய், உடனே அவர் திருப்பாதங்களில் விழுந்து "என் ஆண்டவரே! என் தேவனே"!! என்று சொல்லி அவரை ஆராதித்தார்.

மனிதன் எளிதில் தவறக்கூடியவன். அவனுடைய நெஞ்சம் சுலபமாக இருளடைந்துவிடுகிறது. அவனுடைய ஞானக் கண்கள் உண்மையைப் பார்க்க மறுத்துவிடுகின்றன. ஆனால் கடவுள் அளவுகடந்த இரக்கத்தோடும், அன்போடும் தத்தளிக்கும் ஆத்துமங்களை நிலை நிறுத்துகிறார்.

செபம்

அர்ச். தோமையாரே! நீர் ஒரு சமயம் விசுவாசத்தில் தத்தளித்தபொழுது வெகு அன்போடு திவ்விய இரட்சகரால் அரவணைக்கப்பட்டீரே! நாங்கள் பல துன்பங்களிடையே தவிக்கும் நேரத்தில் எங்களைக் கைத்தூக்கிக் காப்பாற்றும்படி உம்மை மன்றாடுகிறோம்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . .

ஐந்தாவது நாள்

"தோமையே நீ என்னை கண்டதினாலல்லோ விசுவசித்தாய். காணாதிருந்தும் விசுவசித்தவர்கள் பாக்கியவான்கள் (அரு 20:29) என்று நமது ஆண்டவர் அர்ச். தோமையாருக்குச் சொன்னார். நமது இரட்சண்யத்தை அடுத்த காரியங்களையும், நமது வேதத்தின் பரம இரகசியங்களையும், தேவ திரவிய அனுமானங்களால் நமக்குக் கிடைக்கக்கூடிய பலன்களையும் நமது சரீரக் கண்களால் காணமுடியாது. கைகளால் தொட்டுப் பார்க்கமுடியாது. அவற்றை அறிந்து ஏற்றுக்கொள்ள விசுவாசமெனும் ஞான சக்தி அவசியம். நமது சரீரக் கண்களால் காணாமலும், கைகளால் தொடாமலும், கடவுளுடைய காரியங்களை வரப்பிரசாதத்தின் சக்தியால் நாம் கிரகித்துக் கொள்ள வேண்டுமே தவிர இவ்விஷயங்களில் சரீர அனுபவத்தை எதிர்பார்க்கலாகாது.

சின்னமலை, அர்ச். தோமையார் விரோதிகளால் துன்புறுத்தப்பட்டபோது ஒளிந்துகொண்டதாகச் சொல்லப்படும் குகையின் மீது கட்டப்பட்டிருக்கும் கோவில்.

இயோஸ் தீவில் அர்ச். தோமையாருடைய சரீரம் அடக்கம் செய்யப்பட்ட இடத்தின்மேல் வைக்கப்பட்டிருந்த கற்பலகை. அதன்மேல் அவருடைய உருவமும், "அர்ச். தோமையார்' என்று கிரேக்கு மொழியில் எழுத்துக்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன.

சின்னமலைக் கெபியிலுள்ள சலவை கற்பீடம். இங்குத்தான் அர்ச். தோமையார் விரோதிகளால் துரத்தப்பட்டபோது அடைக்கலம் புகுந்தது.

செபம்

அர்ச். தோமையாரே! கண்ணால் காணமுடியாமலும் காதினால் கேட்டறிய முடியாமலும் மனதிற்கு எட்டாமலும் உள்ளதும், கடவுள் தம் நேச மக்களுக்கெனத் தயாரித்திருப்பதுமான தெய்வீக பேரின்பத்தை நாங்கள் இழந்துபோகாதபடி, உயிருள்ள விசுவாசத்தோடு எங்கள் ஆத்துமங்களைத் தயாரிக்க வேண்டிய வரங்களை திவ்விய இரட்சகரிடமிருந்து பெற்றுத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . .

ஆறாவது நாள்

கிறீஸ்துநாதர் உயிர்த்ததைப்பற்றி அர்ச். தோமையார் சிறிது சந்தேகித்தார். எனினும் அவருடைய சந்தேகமானது அவர் உண்மையாகவே உயிர்த்தார் என்று காட்டுவதற்கு ஏற்றதொரு ஆதாரமாயிருக்கின்றது. ஏனெனில் அவ்வளவு பிடிவாதமாக மறுத்துவிட்ட ஒரு விஷயத்தை அவர் பிற்பாடு அவ்வளவு உறுதியாக ஏற்றுக்கொண்டு அவ்வுண்மையை எண்பிக்க தமது உயிரையும் கொடுக்கத் துணிவு ஏற்பட்டது ஆண்டவருடைய உத்தானத்தின் சக்தியும், மகிமையுமேயாம்.

கிறீஸ்துநாதர் உயிர்த்திராவிட்டால் நமது விசுவாசம் வீண் என்று வேதாகமத்தில் சொல்லப்பட்டிருப்பதற் கிணங்க, கிறீஸ்துநாதர் உண்மையாகவே உயிர்த்திராதிருந்தால், அர்ச். தோமையார் எளிதில் அதை ஏற்றுக் கொண்டிருக்கவும் மாட்டார். கிறீஸ்துநாதருக்குச் சாட்சிகூறி பிரசங்கித்திருக்கவும் மாட்டார். அதற்காக உயிர் தந்து வேதசாட்சியாயிருக்கவுமாட்டார்.

செபம்

கிறீஸ்துநாதருடைய உத்தானத்தின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படக் கூடியவரான, அர்ச். தோமையாரே, நாங்கள் கிறீஸ்துநாதருடைய பாடுகளையும், மரணத்தையும் உத்தானத்தையும் உறுதியுள்ள மனதோடு விசுவசித்து உம்மைப்போல் நாங்களும் திவ்விய இரட்சகருக்குச் சாட்சி கூறப் பேறுபெற்ற

வர்களாகும்படி எங்களுக்காக மன்றாடும். விசுவாச இருளி லும், சந்தேக நிலையிலும் தத்தளிக்கும் அநேகர் தங்கள் உண்மையான இரட்சகராகிய சேசுகிறீஸ்துவினிடம் வந்து சேரும் படி வேண்டிக்கொள்ளும்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . . .

ஏழாவது நாள்

அர்ச். தோமையார், மேதியா, பார்த்தியா, பாரசீகம் முத லான நாடுகளில் சுவிசேஷத்தைப் போதித்து, கடைசியாக நம் நாட்டிற்குவந்து, கிறீஸ்துநாதருக்காக உழைத்து, அநேகர் இரட்சண்யம் அடைவதற்கு காரணமாயிருந்தார். அவர் கிறீஸ்து நாதருக்காக உழைத்தார். கிறீஸ்துநாதர் அவரோடு இருந்து, அவர் செய்த வேலைகளையெல்லாம் ஆசீர்வதித்து உழைப்புக்குத் தக்க பலன் அளித்தார்.

நாமும் அப்போஸ்தலர்களைப் போல கிறீஸ்துநாதருக்காக உழைக்கவேண்டும்.

கடவுளுக்காக உழைப்பது எப்பேர்ப்பட்ட பாக்கியம் என்பதை உணரவேண்டும். அதுவும் கடவுளுக்காகப் பல துன்பங்கள் பட்டு உழைப்பதைக் காட்டிலும் மேலான பாக்கியமே இல்லை யென்று நினைக்கவேண்டும். நாம் கடவுளுக்காக உழைத் தால் கடவுள் நம்மிலிருந்துகொண்டு, நம்மோடு உழைத்து பலன் அளிப்பார். நமது விசுவாசத்தை நாமே வைத்துக் கொண்டு இருப்பதில் பிரமாதம் ஒன்றுமில்லை. அதைச் சகலரும் அடையவேணுமென்று உழைப்பதே உண்மையான கிறீஸ்து வனின் தன்மை.

செபம்

அர்ச். தோமையாரே! நீர் கிறீஸ்துநாதருக்காக உழைத்தது போல, நாங்களும் எங்களைச் சுற்றியுள்ள அவிசுவாசிகள் மத்தி யில் பரிசுத்த கத்தோலிக்கு விசுவாசத்தைப் பரப்புவதற்கு எங் களுக்கு, ஊக்கத்தையும், தைரியத்தையும், ஞான வெளிச்சத் தையும் சர்வேசுரன் அருளும்படி வேண்டிக்கொள்ளும்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . .

எட்டாவது நாள்

ஒருவன் தன் சிநேகிதர்களுக்காகத் தன் உயிரைக் கொடுப்பதைக் காட்டிலும் சிநேகத்தின் அத்தாட்சி வேறில்லை, என்பதற்கு ஒப்ப அர்ச். தோமையார் தமது நேச குருவாகிய கிறீஸ்துநாதருக்காக தமது உயிரைக் கொடுக்கத் தயங்கவில்லை. பல அப்போஸ்தலிக்கு அலுவல்களினிடையே ஜெப தியானத்திலாழ்ந்து கடவுளுடைய நேசத்திலீடுபட்டிருக்கையில், ஈட்டியால் குத்திக் கொல்லப்பட்டார். இவ்வளவு மேலான சிநேகம் நம்மில் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுவோமாக.

செபம்

கிறீஸ்துநாதருடைய நேசத்திற்காக, பாக்கியமான வேத சாட்சியான அர்ச். தோமையாரே, எங்கள் பாதுகாவலரான அர்ச். அப்போஸ்தலரே ! தேவ சிநேகத்தின் முன்மாதிரிகையே! உமது புண்ணியங்களினால் ஏவப்பட்டு நாங்களும் உம்மைப் போல் விசுவாசத்திலும் தேவ சிநேகத்திலும் பரிபூரணத்தை அடைந்து, உலகத்தின்மீதும், பசாசின்மீதும் வெற்றி அடையும்படி எங்களுக்காக மன்றாடும். கடவுளுக்காக நாங்கள் எதையும் இழக்கத்தயாராயிருக்கவும் அவருக்காக எந்தத் துன்பத்தையும் பொறுத்துக் கொள்ளவும் எங்களுக்கு வேண்டிய வரங்களை பெற்றுத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

(மன்றாட்டுகளைச் சொல்லவும்.) . . . . .

ஒன்பதாவது நாள்

திருச்சபையானது அப்போஸ்தலர்களாகிய அஸ்திவாரத்தின் மீது அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் வாய் மொழியாகத் தான் கிறீஸ்துநாதருடைய போதனைகள் உலகெங்கும் பரவின. அப்போஸ்தலர்களே கிறீஸ்துநாதரோடு திருச்சபையின் மூலைக் கல்லாகவும், திருச்சபையைப் பாதுகாக்கும் அழியமுடியாத வச்சிரத் தூண்களாகவும் இருக்கிறார்கள். மிகச் சாதாரண மனிதர்களாகிய இவர்கள் மூலமாக உலகத்தையெல்லாம் தம் வசப்படுத்திய நம் ஆண்டவருடைய தெய்வ வல்லமையை

நாம் போற்றி, அவருக்கு நன்றியறிதல் உள்ளவர்களாக நமது கத்தோலிக்கு விசுவாசத்தைப் பிரமாணிக்கமாக அனுசரிப்பதோடு அதை எங்கும் பரப்பும்படி நம்மாலியன்ற முயற்சி செய்வோமாக. நமது எளிய மன்றாட்டுகளையெல்லாம் அர்ச். தோமையாருடைய செபத்தின் வல்லமையால் ஆண்டவர் ஏற்றருள்வாராக.

செபம்

அர்ச். தோமையாரே ! எங்கள் நாட்டிற்கும், மேற்றிராசனத்திற்கும் பாதுகாவலரான அர்ச். அப்போஸ்தலரே, இன்று நாங்கள் உமக்குச் செய்யும் வணக்கத்தை ஏற்றுக்கொண்டு எங்களை ஆசிர்வதிக்கும்படி உம்மைத் தாழ்ச்சியோடு மன்றாடுகிறோம். இங்கு இருக்கும் உமது பரிசுத்த கல்லறையைத் தரிசித்து உம்முடைய ஆசீர்வாதத்தைப் பெறும்படி உம்மை நாடிவந்த ஆயிரக்கணக்கான உமது அடியார்கள் உமக்குச் செய்த செபங்களையும், உமக்குச் சமர்ப்பித்த விண்ணப்பங்களையும் விசேஷமாக உமக்கு இணையாக இந்நாட்டில் உழைத்த அர்ச். சவரியார் இங்குவந்து செய்த மன்றாட்டுகளையும், உம் மூலமாக சர்வேசுவரனுக்கு ஒப்புக்கொடுத்து நாங்கள் இப்போது செய்யும் எங்கள் எளிய செபங்களை ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகிறோம். இந்நாட்டிலும் இந்நகரிலும் உள்ளவர்கள் அனைவரும், இனி வரப்போகும் தலைமுறைகளும் உண்மையான விசுவாசத்தைப் பெற்று கடவுளால் அனுப்பப்பட்ட ஒரே மீட்பரும் ஆண்டவருமான தேவகுமாரன் சேசுகிறீஸ்துவை அறிந்து நேசித்து நித்திய சீவனை சுதந்தரித்துக் கொள்ளும்படி ஏராளமான வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளச் சர்வேசுவரன் தயை செய்ய நீர் இடைவிடாமல் மன்றாடி வருவீராக.

(மன்றாட்டுக்களை சொல்லவும்.) . . . . . .